SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
16-30 ஏப்ரல் 2026 ₹25
Volume : 46 Issue : 21
www.samarasam.net

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் களம்
– ஒரு பார்வை

தேர்தல் சிறப்பிதழ்

தமிழ்நாடு வெல்லட்டும்!




தேர்தல் நாள் : 2026 ஏப்ரல் 23

தேர்தல் அரசியல்

நம் வாக்கு உரிமை

## அரசியலற்ற இளைஞர்களை உருவாக்கி வரும் விஜயின் அரசியல் யாருக்குப் பயன்?

# ADMISSION NOTICE

# THASSIM BEEVI ABDUL KADER COLLEGE FOR WOMEN


A Minority Institution Sponsored by Seethakathi Trust, Chennai
Recognized by DBT under Star College Scheme, Ministry of Science and Technology, Govt. of India.
An Autonomous Institution Affiliated to Alagappa University, Karaikudi.
Accredited by NAAC with "A" Grade [CGPA:3.16] & ISO 9001:2015 Certified Institution.
Recognized by UGC under 2(f) & 12 (B). Kilakarai – 623517, Ramanathapuram District
**Phone :** 04567 - 241934 / 241933 **E-mail :** principal@thassim.ac.in




**Dr. B.S.Abdur Rahman**
Founder

## UG PROGRAMMES (3 Years-Regular)

Part-I Language options for four semesters
Tamil, Arabic & Hindi

### ARTS, COMMERCE & MANAGEMENT

B A Afzal-Ul-Ulamah
B A English
B Com
B Com with Computer Applications
B Com Professional Accounting
B B A

### LIFE SCIENCE, FOOD SCIENCE, COMPUTATIONAL SCIENCE AND SOCIAL SCIENCE

B Sc Nutrition and Dietetics
B Sc Costume and Fashion Design
B Sc Information Technology
B Sc Computer Science
B Sc IT and Cyber Security
B C A
B Sc Artificial Intelligence & Data Science
B Sc Mathematics
B Sc Chemistry
B Sc Microbiology
B Sc Biotechnology
B Sc Psychology

## PG PROGRAMMES (2 Years-Regular)

M A English
M Com
M Sc Nutrition and Dietetics
M Sc Costume and Fashion Design
M Sc Information Technology
M C A (2 Years) AICTE Approved
M Sc Mathematics
M Sc Chemistry
M Sc Microbiology
M Sc Psychology

## RESEARCH PROGRAMMES

**Ph D** (Full Time / Part Time)

Ph D in Commerce
Ph D in Computer Science
Ph D in Home Science
Ph D in Chemistry

**Admission Centre @ Ramnad**
Opp. to SMS Super Market, Near Apollo Pharmacy, Bharathi Nagar
**Contact: 9342454632**

**Collaborative Diploma & Advance Diploma Special Education Programmes**
(One Year Programme) ✦ UG Degree / UG Degree with B.Ed can apply

Hands-on laboratories Training, Field visits, Industrial exposure for science students under DBT Star College scheme

Open source Geospatial Knowledge Centre for the Ramnathapuram district in collaboration with IIT Bombay

Monthly Stipend for meritorious Research Scholars

Research Collaboration with Industries / Universities

Diploma in Muballiga for All Muslim Students in collaboration with UNIS Academy

Full time Muallama and Muballiga for Hostel Muslim students

Well-furnished Hostel, Free Wifi, Nutritious Food, Fitness Centre, Indoor & Outdoor Games Facilities

Well Equipped Central Library and E-Library

College Bus Facilities

Transforming budding Graduates into Campus Startups and Women Entrepreneurs through TBIIC

Japanese Language Learning Centre

### CONCESSION ON TUITION FEE FOR SPORTS PLAYERS

| Participation in International | Participation in National | Participation in State Level | Winner in District Level |
|---|---|---|---|
| 100% | 75% | 50% | 25% |

Recognised by State and Central Government Sports Development Authority

Rs.1000/- concession for the pre-Registration seats from 20th April 2026 to 8th May 2026.

### CONCESSION ON TUITION FEE FOR MERITORIOUS STUDENTS

| PG PROGRAMME | Percentage in UG | 90% above | 85 - 89% | 80 - 84% | 75 - 79% |
|---|---|---|---|---|---|
| | Concession | 100% | 75% | 50% | 25% |

Fees Concession for State, District and Regional Level Toppers

**CONCESSION ON TUITION FEE FOR ALUMNAE STUDENTS (25% for All PG Programmes)** **Free Hostel for PG & Ph.D Students**

**Rs.2000/- concession for the students from the sister institutions at the time of admission.**

**Mr Arif Buhary Rahman**
Chairman

**Alhaj Khalid A K Buhari**
Secretary

**Dr Rahmathunisa Abdur Rahman**
Correspondent

**Dr S Sumaya**
Principal

93424 54601, 93424 54632
94426 17038, 94426 17021

: admissionstbakc@thassim.ac.in

Admission through website :
**www.thassim.ac.in**



# உள்ளே...


**தலையங்கம்**
7 தமிழ்நாடு வெல்லட்டும்!

**சேயன் இப்ராகிம்**
8 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் களம் - ஒரு பார்வை

**கப்ளிசேட்**
14 தேர்தல் அரசியல்

**அ.நஜ்முத்தீன்**
18 சிறப்பான ஆட்சியும் குடிமக்களின் பொறுப்பும்!

**வி.எஸ். முஹம்மத் அமீன்**
20 மேடை: சாதியின் பக்கம் அல்ல நீதியின் பக்கம் நிற்கின்றோம்

**எம். நூருல் அமீன்**
30 நம் வாக்கு நம் உரிமை

**அ.மரியம் ஷராஃபியா**
32 நபிகள் நாயகம்(ஸல்) போதிக்கும் விலங்கு வளர்ப்பு

**முஜாஹித்**
35 அரசியலற்ற இளைஞர்களை உருவாக்கி வரும் விஜயின் அரசியல் யாருக்குப் பயன்?

**அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது**
38 மனநிறைவுடன் வாழ..!

**வி.எஸ். முஹம்மத் அமீன்**
40 சிறுகதை : இந்திய முத்தம்

**K. ஜலாலுத்தீன்**
44 புத்தக மதிப்புரை: வெறுப்பு அரசியல்

**ஜரினா ஜமால்**
46 நாவல் : அக்கரைப் பச்சை

**கடைசிப் பக்கம்**
50 மக்கள் நல அரசு அமைய வேண்டும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தேர்தல் நிலைப்பாடு

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு*
*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net



## பேச வேண்டிய நேரம் இது

உலகமெல்லாம் முஸ்லிம்கள் பெருநாள் கொண்டாடி மகிழும் வேளையில் ஈரான் மக்களை அமெரிக்காவும், இஸ்ரேலும் தாக்கியது. போரின் தாக்கத்தால் இங்கு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டு பெரும் சிரமத்தைச் சந்திக்கின்றோம். இந்திய ஆட்சியாளர்கள் இதைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும். தேர்தல் நெருங்குகிறது. அரசியல் அவலங்கள் அரங்கேறும் நேரம். மக்கள் பிரச்னைகளைப் பேச வேண்டும். போதை, பாலியல் தொல்லை, கொலை, லஞ்சம் போன்றவற்றைக் குறித்து பேச வேண்டிய நேரம். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். திருப்பரங்குன்றம் ஆவணப்படம் காலத்தின் தேவை. வெள்ளைத் துணியின் கீழ் உறங்கும் உலகம் கவிதை மனதை நெகிழ வைத்துவிட்டது.

– இரா. சண்முகவேல், கீழக்கலங்கல்

## கண்ணீரை வரவழைத்த கவிதை

தலையங்கம் சிறப்பாகத் தீட்டப்பட்டுள்ளது. அரபு நாடுகளைத் தாக்கக்கூடாது என்று பேசுபவர்கள் அமெரிக்காவுக்கு ஏன் தளம் அமைத்துக் கொடுத்தார்கள்? என்று கேட்க வேண்டும். உயர் தலைவரையும் பள்ளிக் குழந்தைகளையும் போர் நெறி மீறி கொன்றவர்களைப் பழி தீர்க்கவும் தங்களைத் தாக்குபவர்களை எதிர்த்துத் தாக்குவதற்கும் ஈரானுக்கு தார்மிக முழு உரிமை உண்டு.

சமாதானப் பேச்சு நடக்கும் போதே உள் நோக்கத்தோடு போரை ஆரம்பித்த இஸ்ரேலுக்கும், அமெரிக்காவுக்கும் தக்க பாடம் புகட்டப்பட வேண்டும். பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்கிற நிலையில் இந்தியப் பிரதமரின் செயல்பாடுகள் உள்ளன. பள்ளிக் குழந்தைகளைக் கொன்ற இஸ்ரேலின் கொடூரத்தை முத்துக்கிருஷ்ணன் கவிதையில் வடித்துக் காட்டிய விதம் கண்ணீரை வரவழைத்து விட்டது.

– ப.சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்

## இந்த இதழ் பாதுகாக்க வேண்டிய கையேடு

இஸ்ரேலைப் பாதுகாக்க வளைகுடா நாடுகள் அமெரிக்கத் தளங்களுக்கு இடம் கொடுத்த பாதகத்தை அந்த நாடுகளே உணரும்படி சூழல் மாறி இருக்கிறது. இஸ்ரேலைப் பாதுகாக்கும் அமெரிக்க இராணுவ வீரர்களுக்குரிய பராமரிப்புச் செலவுகளுக்கும் அரபு நாடுகளின் பணம் சுரண்டப்படுவது பெரும் அநியாயம்!

ஈரான் - அமெரிக்க - இஸ்ரேல் போரின் முழுப் பின்னணிகளை ஆரம்பம் முதல் இன்று வரை வரலாறாகத் தொகுத்து பல கட்டுரைகள் தாங்கி வந்த இந்த இதழைப் பத்திரப்படுத்தி வைக்கும் கையேடாக வெளியிட்டமைக்கு சமரசத்திற்கு நன்றி. ஆயத்துல்லாஹ் அலீ கமேனியை இஸ்ரேல் கொன்று விடத் துடித்ததற்கான காரணங்கள் அவர் பற்றிய 36 ஆண்டுகால அரசியல் வாழ்வு பற்றிய கட்டுரையில் சான்றுகளாக மிளிர்வதை அறிந்து கொண்டேன். இஸ்ரேல் அமெரிக்க தாக்குதல் நடக்கும் இக்கட்டான இந்த நேரத்தில் உலக முஸ்லிம் சமுதாயம் நடந்து கொள்ள வேண்டிய வழிமுறைகளை இஸ்லாமிய அறிஞர்களின் கூட்டறிக்கையில் கூறியபடி வழி நடக்க கடமைப்பட்டிருக்கின்றோம்.

– S.A. சபீர் அஹ்மது, ஆணைக்காரன்சத்திரம்

## நல்லிணக்கத்திற்கான ஆவணம்

அணு ஆயுதங்களைக் காரணம் காட்டி ஈரான்மீது இஸ்ரேலும், அமெரிக்காவும் போர் தொடுத்தது என்று நினைப்பவர்களுக்கு முழுப் பின்னணியையும் சமரசம் தெளிவுபடுத்தியுள்ளது. திருப்பரங்குன்றத்தில் பல தரப்பட்ட சமய நல்லிணக்கவாதிகள் இருப்

பதை ஆவணப்படுத்திய தோழர்களுக்கு நன்றி. ரமளானுக்குப் பிறகு நமது வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்ற வாழ்க்கைப் பாடம் அருமை.

– S. மகுதனன், M. லைலாம்மா,
S. அஜித்தா, தேனி

## வீறுகொண்டெழும் வித்துகள்

வித்துகள் செத்துப் போவதில்லை. வீறு கொண்டு முளைக்கும். ஆயத்துல்லாஹ் அலீ கமேனிகள் வித்துகள் போன்று பிறந்து கொண்டே இருப்பார்கள். அமெரிக்க இஸ்ரேலியத் தாக்குதல் கோழைத்தனமானது. அணு ஆயுதங்களை இஸ்ரேலும், அமெரிக்காவும் வைத்திருக்கும்போது ஈரான் வைத்திருப்பதை எப்படி குற்றப்படுத்த முடியும்? இந்த இரட்டை நிலை ஆபத்தானது. போரில் நியாயம் வெல்லும். ஈரான் தக்க பதிலடி கொடுக்கும்.

– ப. பீர் இலாஹி, உத்தமபாளையம்

## ஆணவம் அழியட்டும்; போர் ஓயட்டும்

போர் குறித்து சமரசம் விரிவாய் அலசியிருந்தது. அமெரிக்காவின் ஆணவமும், ட்ரம்பின் தலைக்கணமும் ஒழியாத வரை போர்கள் நிற்கப்போவதில்லை. போர்களினால் பசி, பட்டினி, நோய், பொருளாதாரப் பாதிப்பு என உலக நாடுகள் பாதிக்கப்படுவது குறித்தெல்லாம் அவர்களுக்குக் கவலையில்லை. அமெரிக்காவின் ஆணவம் அழியட்டும். போர் முடிவுக்கு வரட்டும். உலகம் அமைதி பெறட்டும்.

– M. கிருபானந்தன், புதுவை

## நெஞ்சை உலுக்கிய கவிதைகள்

அ. முத்துக் கிருஷ்ணன் எழுதிய கண்ணீரின் வாசம், வெள்ளைத் துணியின் கீழ் உறங்கும் உலகம், மீண்டும் முளைக்கும் சிரிப்புகள் மூன்று கவிதைகளும், அதற்கேற்ற படங்களும் நெஞ்சை உலுக்கிவிட்டது. இந்தக் காயங்கள் தீர எத்தனை காலமாகுமோ?

– ஜே. மஃரூப், குலசேகரன் பட்டிணம்

## புது உலகம் வேண்டும்

கொள்ளையன்
வெள்ளை மாளிகையில் துயில
வளைகுடாவின் எண்ணெய் வளங்களைத் திருட
எண்ணிலடங்கா மனிதவளம் மடிய
ஏன் இந்தப் போர் வெறி
மனிதகுலம் அறியத் தவறிய மானுட நெறி
ஆயுதங்கள் இல்லா உலகில்
ஆனந்தம் கொண்டு வாழ
புதியதோர் உலகம் வேண்டுவோம்.

– M.A. அன்வர், சென்னை

## நெருக்கடிக்கு உள்ளாகும் மனித வாழ்வு

உலக மனசாட்சியின் குரல் உயிர்த்தெழட்டும் தலையங்கம் சிறப்பு. போர்களால் வீழும் உலகப் பொருளாதாரம் கட்டுரையில் விவரித்துள்ளதைப் போல் ஒட்டுமொத்த மனிதவாழ்வும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகிவிடும். ரமளானைத் தொடர்ந்து அடுத்தது என்ன என்பதை ஒவ்வொரும் சிந்திக்க வேண்டிய தருணம். ரமளானின் செயல்பாடுகள் தொடர்ந்தால் மட்டுமே யாவும் சாத்தியமாகும்.

ஈரானுக்கு எதிரான அமெரிக்க இஸ்ரேலியப் போர் குறித்த டாக்டர் முஹையுதீன் அவர்களின் தொகுப்பு தெளிவைத் தந்தது.

‘ஆளுமை உருவாக்கம் குர்ஆனில்’ சிறிய தொகுப்பாக இருந்தாலும் ஒரு மனிதனைத் திறம்படச் செயல்பட வைக்கும். அ.முத்துக் கிருஷ்ணனின் மூன்று கவிதைகளும் உள்ளத்தில் இடியாய் இறங்கியது. உலகம் கொடூரர்களின் கையில். விடுவிக்கக் கூடிய காலம் விரைவில் வரவேண்டும்.

– சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

## மிகச்சிறந்த ஆய்வுக் கட்டுரை

சமரசம் மார்ச் இதழ் வீரம் செறிந்த இதழ் என்றே சொல்லலாம். ஈரானின் உச்சத் தலைவர் ஷஹீத் ஆயத்துல்லாஹ் அலீ கமேனியின் வீரமரணம் இறை நம்பிக்கையாளர்கள் அனைவருக்கும் ஒரு நிகழ்கால

தியாக வாழ்க்கை அனுபவம். ஈரானுக்கு எதிரான அமெரிக்க இஸ்ரேலியப் போர் - உள்ளும் புறமும் கட்டுரையில் டாக்டர் முஹையுதீன் போரின் உண்மையான பின்னணியை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளார். இது மிகச் சிறந்த ஆய்வுக்கட்டுரை. போர் எண்ணெய் தொடர்பானது அல்ல. அகண்ட சியோனிச இஸ்ரேல் உருவாக்கம் தொடர்பானது என்பதை என் போன்ற சராசரி வாசகர்கள் புரிந்து கொள்ள முடிந்தது. இதனை இன்னும் விரிவுபடுத்தி தனி நூலாகக் கொண்டு வரலாம். திருப்பரங்குன்றம் ஃபைல்ஸ் ஆவணப்படம் சமூக நல்லிணக்கத்தை ஆதரிக்கும் அனைவரும் வைரல் செய்ய வேண்டிய படம்.

- முஹம்மது ஆரிஃப், ஓசூர்

### வெட்கக் கேடு

ஈரானுக்கு இருக்கும் துணிச்சல் அரபு நாடுகளுக்கு இல்லாமல் போனது வெட்கக் கேடு. அரபு மன்னர்களுக்கு மத்தியில் கமேனி மாவீரராய்த் திகழ்கிறார். போரினால் எத்தனை உயிர்களை இழக்கின்றோம். உயிர்கள் மட்டுமல்ல உலகப் பொருளாதாரம் எப்படி வீழ்கிறது என்பதை கப்ளிசேட் விரிவாக அலசியுள்ளார். ஆளுமை உருவாக்கம் திருக்குர்ஆனில் கட்டுரை சிறப்பான பார்வை.

- ப.குருசாமி, தேனி

### தர்மமே வெல்லும்

பரிவும் அன்பும் செலுத்த வேண்டிய ரமளான் மாதத்தில் உலகின் போலீஸ் என்று சொல்லிக்கொண்டு உலகின் ரௌடியாகச் செயல் பட்டுக்கொண்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி அவர்களது மக்களாலேயே வீழ்வது உறுதி. உண்மைக்குப் புறம்பாக ரசாயன ஆயுதங்கள் உள்ளது என்று சதாம் ஹுசைனை தூக்கிலிட்டார்கள். இப்பொழுது ஈரானின் ஆயத்துல்லாஹ் அலீ கமேனியைக் கொன்றார்கள். தர்மத்தை சூது கவ்வும் இறுதியில் தர்மமே வெல்லும்.

- V.K. பீமராஜா, ராஜபாளையம்



சரம் : 46
மலர் : 21

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

ஹிஜ்ரி 1447 ஷவ்வால் 27 - துல்கஃதா 12 ● 2026 ஏப்ரல் 16-30

# தமிழ்நாடு வெல்லட்டும்!

2026 ஏப்ரல் 23ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான தேர்தல் ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இத்தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியும், அதிமுக பாஜக இணைந்த தேசிய ஜனநாயக் கூட்டணியும் களம் காண்கின்றன. நாம் தமிழர் கட்சியும், தமிழக வெற்றிக் கழகமும் தனித்துக் களம் இறங்கியுள்ளன.

எதேச்சதிகார ஆட்சி, மன்னராட்சி என்று உலக நாடுகள் பல தகுதியற்ற ஆதிக்கவாதிகளின் பிடியில் சிக்கித் தவிக்கின்ற வேளையில் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் ஜனநாயக உரிமையை இந்தியர்களாகிய நாம் பெற்றிருக்கின்றோம். இந்த வாய்ப்பை மிகச் சரியாகப் பயன்படுத்தி மக்களாட்சிக்கான நல்லவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். காலம் நம் விரல்களில் தந்த இந்த மகத்தான வாய்ப்பை எந்தக் காரணத்தினாலும் தட்டிக் கழித்துவிடாமல் நூறு விழுக்காடு வாக்குச் செலுத்த வேண்டும். இது ஒவ்வொரு குடிமகனின் மீதுள்ள ஜனநாயகக் கடமை.

இந்த ஜனநாயகக் கடமையை மிகக் கவனமாக, மிக மிகச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். தகுதியானவர்களை நாம் தேர்ந்தெடுக்கத் தவறினால் தகுதியற்றவர்களின் கைகளில் அதிகாரம் சென்றுவிடும். நாம் யாரைத் தேர்ந்தெடுக்கப் போகின்றோம் என்பதைக் குறித்து மிக ஆழமாக, நீதியாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

தேர்தல் குளறுபடிகள், போலி வாக்குறுதிகள், போலி வாக்குகள், தங்களுக்குச் சாதகமான தேர்தல் ஆணையர்கள், அதிகாரிகள் என்ற பல்வேறு முயற்சிகளைச் செய்து நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக ஆட்சி அமைத்ததின் விளைவை நாடே இன்று சந்தித்து வருகிறது. மத வெறுப்பு, ஊழல், வேலையின்மை, தனியார் மயமாக்கல், பொருளாதாரப் பின்னடைவு, பெண்கள் பாதுகாப்பின்மை என்று இந்தியா பல பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது.

ஒன்றியத்தில் தாங்கள் நினைத்ததைச் சாதிக்கவும், மாநில சுயாட்சியைப் பறிக்கவும் தீய திட்டத்துடன் ஃபாசிஸ சக்திகள் தமிழ்நாட்டைக் குறிவைத்துக் களமிறங்கியுள்ளன. அவர்களின் சூழ்ச்சிக்கும், மிரட்டலுக்கும் அடிபணிந்து அதிமுகவைச் சீரழித்துச் சின்னாபின்னமாக்கி நிற்கிறார் எடப்பாடி பழனிச்சாமி. அதிமுக எனும் திராவிடக் கட்சியை வகுப்புவாத பாஜக நம் கண்முன்னே விழுங்கி நிற்பது வேதனைக்குரியது.

வகுப்புவாதிகளின் தீய திட்டத்தை முறியடித்து தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல நம்முன் இருக்கின்ற ஒரே வாய்ப்பு திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு மெகா கூட்டணி. புதிதாகக் களம் இறங்கிய நடிகர் விஜயின் தவெக மக்கள் நலம் குறித்த எந்தத் திட்டமும் இல்லாமல் திமுகவை வசைபாடுவதுடன், எல்லாவற்றுக்கும் திமுகவே காரணம் என்பதை மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கிறது.

நடிகர் மீதான அபிமானம், வாக்குக்கு விலைபோதல், நமக்கு வேண்டியவர்கள் என்ற நிலையிலிருந்து அணுகாமல் தமிழ்நாட்டின் வளர்ச்சியையும், மக்கள் நலனையும் கருத்தில் கொண்டு நாம் முடிவெடுக்க வேண்டியிருக்கின்றது. நல்லவர்களைத் தேர்ந்தெடுத்தல் என்ற பெரும் வாய்ப்பு இன்று இருப்பதில் நல்லவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. எனவே அனைவரும் வாக்களித்து தமிழ்நாட்டை வெல்லச் செய்வோம். தமிழ்நாடு வெல்லட்டும்.

● சேயன் இப்ராகிம்

# தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் களம்

*– ஒரு பார்வை*

**2026 ஏப்ரல் 23 அன்று நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் நான்கு அணிகள் களத்தில் உள்ளன. ஆளும் திமுக தலைமையில் ஓர் அணி. இந்த அணியில் ஏற்கனவே இருந்த கட்சிகளோடு தற்போது தேமுதிகவும், எஸ்டிபிஐயும் இணைந்திருக்கின்றன. அதிமுக தலைமையிலான கூட்டணியில் 2012ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இருந்த கட்சி களோடு தற்போது அமமுக சேர்ந்துள்ளது. சீமானின் நாம் தமிழர் கட்சி கடந்த தேர்தலைப் போலவே இந்தத் தேர்தலிலும் தனித்துப் போட்டியிடுகின்றது. புதிய வரவான நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகமும் தனியே போட்டியிடுகிறது. முக்கியக் கட்சிகளான திமுக, அதிமுக, அமமுக ஆகியவற்றில் இடம் கிடைக்காத பலர் தவெகவில் சேர்ந்து தேர்தலில் அக்கட்சியின் வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர்.**

## திமுக அணி

பாஜகவின் மதவெறி அரசியலையும், மாநிலங்களுக்கு நிதிப் பங்கீடு செய்வதில் ஒன்றிய பாஜக அரசு பெரும் பாகுபாடு காட்டு வதையும் தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் தொடர்ந்து விமர்சித்து வருகிறார். இந்தத் தேர்தல் பரப்புரையிலும் விமர்சிப்பார் என எதிர்பார்க்கலாம். கடந்த ஐந்து ஆண்டு கால திமுக அரசின் சாதனைகளை எடுத் துக் கூறியும் அவர் பரப்புரை செய்வார். இதற்கு முன்னர் நடந்த திமுக ஆட்சிகளோடு ஒப்பிடுகையில், மு.க.ஸ்டாலின் தலைமை யிலான இந்த ஐந்து ஆண்டு ஆட்சியில் அர சிற்கு எதிரான மனப்பான்மை பெருமளவு இல்லை என்றே கருதுகிறேன். இந்த ஐந்து ஆண்டு திமுக ஆட்சியின் சாதகமான அம்சங் களாக நான் பார்ப்பது :

1. மின்வெட்டு இல்லாத மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.

2. அரசு ரேஷன் கடைகள் மூலம் வழங் கப்படும் உணவுப் பொருள்கள் விநியோ கத்தில் பெருமளவு குறைபாடுகள் இல்லை. உணவுப் பொருள்கள் விநியோகம் சீராகவே நடைபெற்று வருகிறது.

3. கடந்த ஐந்து ஆண்டுகளில் பருவ மழை பொய்க்கவில்லை. சராசரி அல்லது அதற்கு அதிகமாகவே பெய்துள்ளது. இதனால் உணவு உற்பத்தியிலோ, குடிநீர் விநியோகத்திலோ பாதிப்பு ஏற்படவில்லை.

4. கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழ் நாட்டின் மிகப் பெரும் நீர் ஆதாரமாக விளங்குகின்ற மேட்டூர் அணை நிர்ணயிக் கப்பட்ட ஜூன் 12ஆம் நாளன்று திறக்கப் பட்டது. இதனால் நீருக்காக கர்நாடக அரசைக் கெஞ்ச சேண்டிய நிலை ஏற்படவில்லை. காவிரி நடுவர் மன்றம், காவிரி தீர்ப்பாயம், காவிரி ஒழுங்காற்றுக் குழு ஆகிய சொற்கள் நமது செவிகளில் படவில்லை.

5. கடந்த ஐந்து ஆண்டுகளாக விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்களின்போது தமிழ் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் மோதல்கள் நடைபெறவில்லை.

6. கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அள வுக்கு சாதி, மத மோதல்கள் நடைபெறவில்லை. எந்த ஓர் இடத்திலும் மக்களைக் கலைப் பதற்காகக் காவதுறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை. யாரும் உயிரிழக்கவில்லை. நான்கைந்து நாள்களுக்கு மேலாகக் கடை அடைப்பு நடத்த வேண்டிய அளவிற்கோ, போக்குவரத்தை நிறுத்தும் அளவுக்கோ எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை.

பெரும் ஆத்திரமூட்டும் நிலைகளிலும் காவல்துறை மிக நிதானமான போக்கையே கடைப்பிடித்து வந்துள்ளது. அதிலும் குறிப்பாக திருப்பரங்குன்றம் பகுதியில் பாஜகவின் தலைவர்களும், சங் பரிவாரத்தினரும் மேற்கொண்ட அவதூறுப் பரப்புரை, ஆத்திரமூட்டும் சமய நல்லிணக்கத்தைக் குலைக்கும் நடவடிக்கைகளை தமிழ்நாடு காவல்துறை மிகச் சாதுர்யமாகக் கையாண்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில் திமுக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இவை அனைவருக்கும் தெரிந்த விஷயங்கள் என்பதால் நான் அவற்றைப் பட்டியலிடவில்லை.


காங்கிரஸ் கட்சி அதிக இடங்களைக் கேட்டும், ஆட்சியில் பங்கு வேண்டுமென்றும் முரண்டு பிடித்த நிலையிலும், சில காங்கிரஸ் தலைவர்கள் கூட்டணியை முறிக்கும் விதத்தில் எழுதியும் பேசியும் வந்த போதிலும் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் மிகவும் முதிர்ச்சியோடு செயல்பட்டு கூட்டணியைத் தக்க வைத்துள்ளார். தேமுதிக, எஸ்டிபிஐ ஆகிய புதிய கட்சிகள் கூட்டணியில் இணைந்த நிலையில் மிகுந்த சிரமத்தோடு தொகுதிப் பங்கீட்டையும் முடித்து தேர்தலை எதிர்கொள்கிறார்.

## அதிமுக அணி

கடந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு அதிமுக ஒரு தெளிவான அரசியல் நிலைப்பாட்டை எடுக்கவில்லை. 2021 சட்டமன்றத் தேர்தலில் பாஜகவுடன் கூட்டணி வைத்து தேர்தலைச் சந்தித்த அக்கட்சி ஓராண்டிற்குள்ளாகவே பாஜகவுடனான உறவை முறித்துக் கொண்டது. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், சி.வி. சண்முகம் ஆகியோர் பாஜகவுடன் கூட்டணி சேர்ந்ததாலேயே 2021 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக ஆட்சியை இழந்தது என வெளிப்படையாகவே பேசினர். நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் மதுரையில் நடைபெற்ற எஸ்டிபிஐ மாநாட்டில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி மீண்டும் அதிமுக ஒருபோதும் பாஜகவுடன் கூட்டணி வைக்காது என உறுதிபடத் தெரிவித்தார்.

2024 நாடாளுமன்றத் தேர்தலை அதிமுக தனியாகவே சந்தித்தது. தோல்வியுற்றது. (தேமுதிக, புதிய தமிழகம் ஆகியன அதிமுக கூட்டணியில் இருந்தன). நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து ஓராண்டிற்குள்ளாகவே மீண்டும் அதிமுக பாஜகவுடனான தனது கூட்டணி உறவைப் புதுப்பித்துக் கொண்டது. தற்போது அக்கட்சியோடு அமமுக, பாஜக, பாமக(அன்புமணி அணி) ஆகிய மூன்று முக்கிய கட்சிகள் கூட்டணியில் இருக்கின்றன.

அதிமுக அடிப்படையில் ஒரு மதச்சார்பற்ற கட்சி என்பதில் ஐயமில்லை. ஆனால் கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக பாஜகவின் சகவாசத்தின் காரணமாக, ஒன்றிய பாஜக அரசு கொண்டு வந்த அனைத்து முஸ்லிம் விரோதச் சட்டங்களுக்கும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அக்கட்சி ஆதரவு கொடுத்தது. 2019ஆம் ஆண்டு பாஜக அரசால் கொண்டு வரப்பட்ட குடியுரிமைச் சட்டம் நடாளுமன்ற மேலவையில் அதிமுக உறுப்பினர்கள் அளித்த ஆதரவினாலேயே வெற்றி பெற்றது. இந்தச் சட்டத்திற்கு எதிராக தமிழக முஸ்லிம்கள் தன்னெழுச்சியாக கிளர்ந்தெழுந்து போராட்டங்கள் நடத்திய போது



அன்றைய முதல்வர் எடப்பாடி பழனிச் சாமி இந்தச் சட்டம் காரணமாக தமிழ்நாட்டி லிருந்து எந்த ஒரு முஸ்லிமாவது வெளிநாட் டிற்கு அனுப்பப்பட்டாரா எனக் கேள்வி எழுப் பினார். இதனை எதிர்த்து சட்டமன்றத்தில் தீர் மானம் நிறைவேற்ற வேண்டும் என்ற எதிர்க் கட்சிகளின் கோரிக்கையையும் நிராகரித்தார்.

2021ஆம் ஆண்டு பதவிக்கு வந்த திமுக அரசு முஸ்லிம்களின் கோரிக்கையை ஏற்று, குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராக சட்டமன் றத்தில் தீர்மானம் கொண்டு வந்த போது, வேறு ஏதோ சில காரணங்களைச் சொல்லி இந்தத் தீர்மானம் வருவதற்கு முன்னரே அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். முத் தலாக் தடைச் சட்டம், காஷ்மீருக்கு வழங்கப் பட்ட சிறப்புச் சலுகைகள் ரத்து என அனைத்து சட்ட மசோதாக்களையும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அதிமுக உறுப்பினர்கள் ஆதரித்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக ஒன்றிய அரசு கொண்டு வந்த வேளாண் சட்டங் களையும் அதிமுகவினர் ஆதரித்தனர்.

தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு உரிய நிதி வழங்காத போது, அதற்காக அதிமுக குரல் கொடுக்கவில்லை. ஆளுநர் ஆர்.என். ரவியின் அடாவடித்தனங்களையும் கண்டு கொள்ளவில்லை. கண்டிக்கவில்லை. திருப்பரங்குன்றம் தீபத் தூணில் விளக்கு ஏற்றும் விஷயத்திலும் நியாயமான நிலைப் பாட்டை எடுக்கவில்லை. இந்துத்துவ சக்தி களுக்கு ஆதரவாகவே அக்கட்சி நின்றது. திருப்பரங்குன்றம் மலையிலுள்ள சிக்கந்தர் தர்காவை இடமாற்றம் செய்ய வேண்டும் என பாஜக தலைவர்கள் சிலர் கூறிய போது அதற்கும் எடப்பாடி எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை. அதிமுகவின் இத்தகைய போக்கு காரணமாக அக்கட்சியின் மீது முஸ்லிம்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது. இது கூட்டணி தான்; கொள்கையில் சமரசம் செய்து கொள்ள மாட்டோம் என எடப்பாடி பழனிச்சாமி பல முறை கூறிய போதிலும், பாஜகவின் சகவாசத் தால் அதிமுகவின் சிறுபான்மை நலன் சார்ந்த கொள்கையில் அவர் சமரசம் செய்து கொண் டுள்ளார் என்றே கருத வேண்டியதிருக்கிறது.

## நாம் தமிழர் கட்சி

வெற்றி பெறப் போவதில்லை என மிகத் தெளிவாகத் தெரிந்த பின்னரும் இக்கட்சி தனித்துப் போட்டியிடுகிறது. 234 தொகுதி களிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. தமிழ்நாட்டின் பல நூற்றாண்டுகளாக வசித்து வருகின்ற தெலுங்கு, கன்னடம், உருது மொழி பேசுகின்ற மக்களுக்கு ஆள்வதற்கு உரிமை இல்லை என்று சீமான் பேசி வருகிறார். நான் ஒரு சைவன். எனது கடவுள் முருகன் என முழங்குகிறார். தனது கட்சிக்கு வாக்களிக்காத முஸ்லிம்களை சாத்தானின் பிள்ளைகள் என்று வசைபாடுகின்றார். ஆனால் தனது கட்சிக்கு வாக்களிக்காத சைவர் குறித்து எதுவும் கூறுவதில்லை. சில ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்லாமும் கிறித்தவமும் அந்நிய மதங்கள். எனவே முஸ்லிம்களும் கிறித்தவர் களும் தாய்ச் சமயமான சைவத்திற்குத் திரும்ப வேண்டுமென திருவாய் மலர்ந்தருளினார்.

பெரியாரைப் புகழ்ந்து பேசிக் கொண் டிருந்தவர், திடீரென்று பெரியார் எதிர்ப்பாள ராக மாறிவிட்டார். பெரியாரையும் பாரதி யாரையும் எதிரெதிரே நிறுத்த முயற்சிக் கிறார். திராவிடக் கோட்டையைப் பிராமணக் கடப்பாரை கொண்டு இடிப்பேன் என்று பாரதியார் விழாவில் பேசினார். இல்லாத தமிழ் தேசியத்தைக் குறித்துப் பேசுகிறார். பிரபாகரனைப் புகழ்ந்து பேசி வருகிறார். ஆனால் சட்டம் இவரை இதுவரை ஒன்றும் செய்யவில்லை. நிறைவேற்ற இயலாத திட்டங்கள் குறித்தே பேசி வருகிறார். கடந்த தேர்தல்களின் போது பெற்ற வாக்கு விழுக் காட்டை வருகின்ற தேர்தலில் தக்க வைத்துக் கொள்வாரா என்பது ஐயமே. தோல்வியுறப் போகும் இவரது கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களித்து அதன் காரணமாக அதிமுக - பாஜக கூட்டணி வெற்றி பெறுவதை பெரும்பாலான முஸ்லிம்கள் விரும்ப மாட் டார்கள்.

## தமிழக வெற்றிக் கழகம்

தமிழ்நாட்டிற்கு இந்தக் கட்சி புது வரவு. இதுவரை எந்தத் தேர்தலிலும் போட்டியிடாத

இக்கட்சி இந்த சட்டமன்றத் தேர்தலில் முதன் முறையாகக் களம் இறங்குகிறது. 234 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. எங்கள் கட்சிக்கும், ஆளுகின்ற திமுகவுக்கு மிடையேதான் போட்டி என அதன் தலைவர் விஜய் தொடர்ந்து கூறி வருகிறார். சினிமா மோகம் காரணமாக அவரது ரசிகர்கள் அவர் செல்லுகின்ற இடங்களிலெல்லாம் ஆயிரக் கணக்கில் கூடி வருகின்றனர். அவரது புதிய படம் வெளியிடப்படுகின்ற முதல் நாளன்று திரையரங்குகளில் கூடி நின்று ஆர்ப்பாட்டம் செய்த அவரது ரசிகர்கள் இப்போது அவரது பொதுக்கூட்டங்களுக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். அவராலேயே கட்டுப்படுத்த முடியாத கூட்டமாக அது திகழ்கிறது. அவரது கரூர் பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளே இதற்குச் சாட்சி. அவரது ரசிகர்கள் குறிப்பாக பெண் ரசிகர்கள் வெளியிடுகின்ற கருத்துகள் அருவெருப்பின் உச்சத்திற்கே செல்கின்றன.

பல பிரச்னைகளில் அவரது நிலைப்பாடு தெளிவில்லை. பாஜக எதிர்ப்பு விஷயத்தில் அவரிடம் ஊசலாட்டம் காணப்படுகிறது. மத்திய தணிக்கைக் குழு அவரது ஜனநாயகன் படத்திற்கு இதுவரை சான்றிதழ் வழங்காமல் இழுத்தடித்து வருவது குறித்துக் கூட அவர் இதுவரை வாய் திறக்கவில்லை. கடந்த கிறிஸ்துமஸ் தினத்தன்று வடமாநிலங்களில் கிறித்தவ வணிகர்களும், தேவாலயங்களும் தாக்கப்பட்ட போது கூட அவர் அதற்குக் கண்டனம் தெரிவிக்கவில்லை. மதுரை திருப்பரங்குன்றம் விவகாரத்திலும் அவர் கருத்து எதுவும் தெரிவிக்காமல் மௌனம் காத்தார். சுருங்கக் கூறின், அவர் பாஜகவுக்கு எதிராகக் குரல் கொடுக்க அஞ்சுகிறார்.

விஜய் பொதுமக்களிடமிருந்து பெரிதும் விலகியே இருக்கிறார். தனி விமானத்தில் வருகிறார். பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். மீண்டும் தனி விமானத்தில் திரும்பிச் செல்கிறார்.

இந்தத் தேர்தலில் இறுதி நேரத்தில் பிற கட்சிகளிலிருந்து விலகி தனது கட்சியில் சேர்ந்தவர்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கியிருக்கிறார். அவரது நடவடிக்கைகளையும், கட்சியின் செயல்பாடுகளையும் பார்க்கின்ற போது அவரை ஒரு மாற்று சக்தியாகக் கருத இயலவில்லை. இந்தத் தேர்தலில் அவரது கட்சிக்குக் கிடைக்கும் இடங்கள், வாக்கு விழுக்காடு ஆகியன அவரது எதிர்கால அரசியலையும் தீர்மானிக்கும். பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

## திமுக ஆட்சியின் மீதான குற்றச்சாட்டுகள்

திமுக ஆட்சியின் நேர்மறையான செயல்பாடுகள் குறித்து இக்கட்டுரையின் தொடக்கத்தில் எழுதியுள்ளேன். எனினும் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டதாகவும், லஞ்சம் அதிகரித்து விட்டதாகவும் எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

## சட்டம் ஒழுங்கு

தமிழ்நாட்டில் அவ்வப்போது நடைபெறுகின்ற தனிப்பட்ட கொலைகள், பெண்களின் மீதான பாலியல் வன் தாக்குதல்கள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி எதிர்க்கட்சிகள் பரப்புரை செய்கின்றன. இப்படிப் பரப்புரை செய்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. தனிப்பட்ட கொலைகள் பெரும்பாலும் தகாத உறவுகள், சொத்துப் பிரச்னைகள் காரணமாக நடைபெறுகின்றன. இவற்றை அரசால் தடுக்க இயலாது. எல்லா ஆட்சிக் காலங்களிலும் இக்கொலைகள் நடைபெற்றுள்ளன.

கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை செய்யப்பட்டதற்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர். ஆனால் இந்தக் கொலைக்கு அரசியல் காரணமல்ல. இதுபோன்று பல அரசியல் தலைவர்கள் கடந்த ஆட்சிகளின் போதும் கொல்லப்பட்டுள்ளனர். எம்ஜிஆர் ஆட்சியின் போது 1979ஆம் ஆண்டு நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜி.முருகையன் கொலை, ஜெயலலிதா ஆட்சியின் போது 2004ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் ஆலடி அருணா கொலை, அதே ஆட்சியில் சுபாஷ் பண்ணை

யார் காவல்துறையினராலேயே சுட்டுக் கொல் லப்பட்டார். அமைச்சர் கே.என். நேரு வின் தம்பி இராமஜெயம் கொலை, பசுபதி பாண்டியன் கொலை என பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

எனினும் காவல் நிலைய மரணச் சம்பவங்கள் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன. அரசு என்னதான் அந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட காவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திருந்தாலும், இச்சம்ப வங்கள் நடைபெறக் கூடாது என்பதே மக்களின் எண்ணமாகும். கள்ளக்குறிச்சியில் விஷச் சாராயம் அருந்தி 70க்கும் மேற் பட் டோர் உயிரிழந்த சம்பவம், காவல்துறை யின் செயலற்ற தன்மையையே சுட்டிக் காட்டியுள்ளது. சில சமூக ஆர்வலர்களின் கொலையும் காவல்துறையின் செயலற்ற தன்மைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன. அரசு இது போன்ற நிகழ்வுகள் நடக்கா வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்திருக்க வேண்டும்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன் முறைச் சம்பவங்களுக்கு அரசை மட்டும் குற்றம் சாட்ட முடியாது. சமூகத்தில் பொது ஒழுக்கம் கெட்டுப் போயிருப்பதே இதற்கு முழு முதற் காரணமாகும். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்குப் பிரச்னை பொதுவாக திருப்திகரமாக இருந்தாலும், மேற்குறிப் பிட்டுள்ள சில சம்பவங்கள் எதிர்க்கட்சிகள் அரசு மீது குற்றம் சாட்டுவதற்கு வசதியாக இருக்கின்றன.

## லஞ்சம்

எல்லா ஆட்சியிலும் லஞ்சம் இருந்தது போலவே இந்த ஆட்சியிலும் இருக்கிறது. இந்த ஆட்சியில் சற்று கூடுதலாக இருக்கிறது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டலாமே தவிர, எங்கள் ஆட்சியில் லஞ்சம் இல்லை என அவை வாதிட இயலாது. நமது நாட்டுத் தேர்தல்களே ஊழல்களுக்கு ஊற்றுக் கண்ணாகத் திகழ்கின்றன. நமது நாட்டிலுள்ள இன்றைய அரசியல் சூழ்நிலையில் லஞ்ச லாவண்யத்தை யாராலும் ஒழித்து விட முடியாது. முழு நிர்வாக அமைப்பையும் தலை கீழாக மாற்றினாலொழிய லஞ்ச ஊழலை ஒழிப்பது சாத்தியமல்ல என்பதே யதார்த்தமான நிலையாகும்.

## முஸ்லிம்கள் நிலைப்பாடு

எதிர்க்கட்சியான அதிமுக, மதவாதக் கட்சியான பாஜகவுடன் கூட்டணி வைத்துள் ளதால் தமிழ்நாட்டிலுள்ள முக்கிய முஸ்லிம் அரசியல் கட்சிகள் திமுக கூட்டணியில் இணைந்து தேர்தலைச் சந்திக்கின்றன. இது தவிர்க்க இயலாதது. எனினும் சில முஸ்லிம் பிரமுகர்கள் திமுக முஸ்லிம் களுக்கு என்ன நன்மை செய்தது என்று கேள்வி எழுப்புகின்றனர். இதற்கு விரிவாகப் பதிலளித்து விவாதக் களமாக்க விரும்ப வில்லை. இன்றைக்கு நாட்டிள்ள அரசியல் சூழ்நிலையில் எந்தக் கட்சியும் முஸ்லிம் களுக்கு நன்மை செய்யும் என எதிர்பார்க்க வேண்டாம். கெடுதி செய்யாமல் இருந்தால் போதும்.

பாஜக ஆளுகின்ற பல மாநிலங்களில் முஸ்லிம்களின் வாழ்வுரிமையே கேள்விக் குள்ளாகி இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட நிலை இல்லை. இங்கு முஸ்லிம்கள் நிம்மதியுடன் வாழ முடிகிறது. இதனையே நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

முஸ்லிம்களின் நலன்கள், உரிமைகள் சார்ந்த விஷயங்களுக்காக காங்கிரஸ், திமுக, விடுதலைச் சிறுத்தைகள், இடது சாரிக் கட்சிகள், திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட பல மதச்சார்பற்ற கட்சிகள் நாடாளுமன்றத் திலும், வெளியிலும் குரல் கொடுக்கின்றன. போராடுகின்றன. அத்தகைய மதச்சார்பற்ற, ஜனநாயகச் சக்திகளை வலுப்படுத்துவதே இன்றைக்கு நமது முக்கியக் கடமையாகும். அந்த வரலாற்றுக் கடமையை தமிழ் நாடு முஸ்லிம்கள் வருகின்ற 23.04.2026 அன்று நிறைவேற்ற வேண்டும். எந்தக் கட்சி ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை விட, எந்தக் கட்சி ஆட்சிக்கு வரக் கூடாது என்பதே சரியான நிலைப்பாடு ஆகும்.

படிப்பது சுகமே ! கற்பது நலமே !

# RDB கல்வி நிறுவனங்கள்

AIM HIGH AIM FAR

RDB Educational & Charitable Trust

ISO 9001 : 2000 உலகத் தரச் சான்று பெற்ற கல்லூரி.

எண்:4, சாலியமங்கலம் ரோடு, பாபநாசம் - 614 205. தஞ்சாவூர் மாவட்டம்.

## ADMISSIONS OPEN

### RAJAGIRI DAWOOD BATCHA COLLEGE OF ARTS AND SCIENCE

Recognized by UGC under Section 2 (f) & 12(B) | Affiliated to Bharathidasan University, Tiruchirappalli

**UG COURSES**

- B.Lit. Tamil | B.A. English
- B.B.A., | B.Com., | B.Com., (Commerce)
- B.Com., (Computer Application)
- B.Com., (Bank Management)
- B.C.A., (Computer Application)
- B.Sc., (Artificial Intelligence)
- B.Sc., (Information Technology)
- B.Sc., (Bio-Technology)
- B.Sc., (Mathematics)
- B.Sc., (Visual Communication)
- B.Sc. Mathematics / Physics / Biotechnology
- B.Sc. Biochemistry / Microbiology
- B.Sc. Visual Communication
- B.Sc. Hotel Management & Catering Science
- B.Sc. Fashion Technology & Design *
- B.Sc. Nutrition and Dietetics *
- B.Sc. Psychology *
- B.A. Islamic studies *

**PG COURSES**

- M.B.A., (Hospital Management)
- M.B.A., (General)
- M.Com., (Commerce)
- M.Sc., (Computer Science)
- M.Sc. Information Technology

**RESEARCH COURSE**

- M.Phil., (Computer Science)
- M.Phil., (Commerce)
- M.Phil., (Management)
- Ph.D., (Management)
- Ph.D., (Commerce)

### RDB MATRICULATION HIGHER SECONDARY SCHOOL

(Approved by Department of School Education, Govt. of Tamil nadu Approval No: 5353A.1/2.20)

**LKG to XII Std**

**+1 COURSES OFFERED**

1. Maths - Physics - Chemistry - Biology
2. Maths - Physics - Chemistry - Computer Science
3. Physics - Chemistry - Botany - Zoology
4. Physics - Chemistry - Biology - Computer Science
5. Economics - Commerce - Accountancy - Computer Application
6. Economics - Commerce - Accountancy - History
7. Economics - Commerce - Accountancy - Business Maths

### RDB COLLEGE OF EDUCATION

(Affiliated to Tamil Nadu Teachers Education University, Chennai) Accredited by NAAC with "B" Grade

- B.Ed. (2 Year Programme)
- M.Ed. (2 Year Programme)

### RDB INSTITUTE OF MANAGEMENT

(Approved by AICTE, Affiliated to Bharathidasan University)

- M.B.A. (HR, Finance, Operation, Systems, Marketing)
- M.B.A. (Hospital Management)

**RESEARCH COURSE**

- M.Phil., Management
- Ph.D., Management

### RDB SCHOOL OF NURSING & PARAMEDICAL SCIENCE (ANM)

(Approved By Tamil Nadu Nursing Council Health and Family Welfare)

- Diploma in Auxiliary Nurses and Midwives (ANM)
  (2 Year Diploma Programme)

### RDB COLLEGE OF NURSING AND PARAMEDICAL SCIENCE

OPENING SOON

***All Muslim Parents are Requested to Support us in Admissions***

**HOSTEL AVAILABLE FOR GIRL STUDENTS**

63809 80363 / 04374-222123

admissions@rdbcas.edu.in

# தேர்தல் அரசியல்

**- கப்ளிசேட்**

**ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் அதிகாரம் என்பது அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்படுத்தியுள்ள உரிமை ஆகும். மக்கள் அதிகாரம் என்பது தேர்தல். இந்திய அரசியலில் ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்ய தேர்ந்தெடுக்கப்படுகிற ஓர் அரசை மீண்டும் வாக்களித்து தொடரச்செய்வதோ அல்லது அவர்களைத் தூக்கியெறிந்து வேறு கட்சிக்கு வாய்ப்பளிப்பதோ மக்களின் முடிவிலும், அதிகாரத்திலும் இருக்கிறது.**

**உலக அளவில் பல்வேறு தேர்தல் முறைகள் பின்பற்றப்படுகின்றன. பன்மை, பெரும்பான்மை முறை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை, கலப்பு உறுப்பினர் முறை என்று பல்வேறு முறை இருந்தாலும் இந்தியாவில் ஒருவர் பெறும் அதிக வாக்குகளை வைத்தே அவரின் வெற்றி தீர்மானிக்கப்படுகிறது.**

ஆனால் ஐரோப்பா, லத்தீன் அமெரிக்காவின் பல நாடுகளில் பரவலாக உள்ள விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறை(Proportional Representation) கட்சிகள் பெறும் வாக்குகளின் அடிப்படையில் தொகுதிகளை ஒதுக்குகின்றன. இதனால் சிறிய கட்சிகள் கூட தாங்கள் பெறும் வாக்குகளின் அடிப்படையில் உறுப்பினர்களைப் பெற முடியும். அரசியல் பிரதிநிதித்துவத்தில் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்குதலையும், பன்முகத் தன்மையை ஊக்குவிப்பதிலும் விகிதாச்சார தேர்தல் முறை முக்கியப் பங்கு வகிக்கின்றது. விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறை சிறுபான்மையினர், பெண்களின் பிரதிநிதிகள் ஆட்சி மன்றங்களில் இடம் பெற எளிதாக அமையும்.

பொதுவாக தேர்தலில் வாக்களிப்பவர்களின் விழுக்காடு குறைந்த அளவிலேயே இருக்கிறது. தேர்தல் ஆணையம் எடுக்கும் பல்வேறு விழிப்பு உணர்வு நடவடிக்கைகளால் ஓரளவு வாக்களிப்பவர்களின் விழுக்காடு கூடினாலும் 100% வாக்குப்பதிவு என்பது சாத்தியமாகவில்லை. போக்குவரத்து, பொருளாதாரம், உடல்நலமின்மை என்று சில காரணங்கள் இருந்தாலும், வாக்காளர்களின் சலிப்பான, பொறுப்பற்ற மனநிலையே இதற்குக் காரணமாகும்.

நாம் வாக்களித்து என்ன ஆகப்போகிறது? என்ன மாற்றம் நிகழ்ந்து விடப்போகிறது? என்ற மனநிலை அவர்கள் வாக்களிப்பதைத் தடுக்கிறது. விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை கடைப்பிடிக்கப்பட்டால், தனது கட்சிக்குத் தனது வாக்கால் பிரதிநிதித்துவம் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வாக்களிப்பவர்களின் விழுக்காடு அதிகரிக்கலாம்.


ஜனநாயக ஆட்சியில் தேர்தல் முக்கியப் பங்கு வகித்தாலும் அவற்றில் சவால்களும், சமரசங்களும் இல்லாமல் இல்லை. ஒவ்வொரு தேர்தல் முறைக்கும் அதற்குரிய சாதக பாதகங்கள் உண்டு. எந்த முறையிலும் முறைகேடுகள், தொகுதி மறுவரையறை, தேர்தல் மோசடி ஆகியவற்றைத் தடுக்க முடியவில்லை. பொதுவாகத் தேர்தல் முறைகளை மாற்றுவதற்கு அதிகாரமும், செல்வாக்கும் உள்ள கட்சிகள் ஒத்துழைக்காது. வெவ்வேறு தேர்தல் முறைகளைப் புரிந்து கொள்வதன் மூலம் தேர்தல் சீர்திருத்தம் குறித்த விவாதங்களில் ஈடுபடவும், சமூகத்திற்குத் தேவையான

சீர்திருத்தங்களை முன்மொழியவும் எளிதாக இருக்கும்.

தேர்தல் குறித்து இந்திய அரசியலமைப்பு சட்டம் 54, 66, 325, 326 உள்ளிட்ட சில பிரிவுகளில் குறிப்பிடப்படுகின்றன. மாநில சட்டசபைகளுக்கும், நாடாளுமன்றத்திற்கும் நடைபெற வேண்டிய தேர்தல் குறித்து வழி முறைகளும், கோட்பாடுகளும் சட்டப் பிரிவு 325, 326இல் விளக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் நடைபெறுகிற எல்லா தேர்தல் களையும் தேர்தல் ஆணையம் என்ற தன்னாட்சி அதிகாரம் பெற்ற அமைப்பு நடத்து கிறது. தேர்தலைச் சுமுகமாக நடத்தவும், தேர்தல் செயல்பாட்டு நடைமுறைகளை மேற் பார்வையிடவும் தேர்தல் ஆணையத்தை நிறுவ சட்டப்பிரிவு 324 வகை செய்கிறது.

தலைமைத் தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்கள், மாநிலங்களில் ஆணை யர்கள் என்ற கட்டமைப்போடு தேர்தல் ஆணையம் செயல்படுகிறது. தேர்தல் ஆணையர்கள் ஒன்றிய, மாநில அரசுகளின் அழுத்தங்களும் இல்லாமல் செயல்பட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் அல்லது 65 வயது முடியும் வரை. இதில் எது முந்தையதோ அதுவரையில் பதவியில் தொடரலாம். பொதுவாக தேர்தல் ஆணை யர்கள் IAS அதிகாரிகள் அல்லது முந்தைய சிவில் சர்வீஸ் அதிகாரிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள்.

தேர்தல் ஆணையர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்தாலும், அவர்களைத் தேர்ந்தெடுக்க பிரதமர், எதிர்கட்சித் தலைவர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்று இருந்த நிலையை மாற்றி இன்று பாஜக அரசு பிரதமர், எதிர்க்கட்சித் தலை வர், ஒன்றிய அரசின் மூத்த அமைச்சர் ஒன்று கூடி



தேர்தல் ஆணையரைப் பரிந்துரைக்கலாம் என்று மாற்றியது. தேர்தல் ஆணையர்களின் செயல்பாடுகளுக்கு நீதிமன்றத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத வகையில் சட்டத் திருத்தத்தையும் செய்தது. இது எல்லா எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புகளையும் மீறி மேற் கொள்ளப்பட்டது.

இதன்மூலம் ஆட்சியில் இருக்கும் ஒன்றிய அரசுக்குச் சாதகமான தேர்தல் ஆணையர் களை நியமித்து தேர்தலில் முறைகேடுகளை எளிதாகச் செய்ய முடியும் என்று தொடர்ந்து எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன. எந்தெந்த மாநிலங்களில் பதவிக்காலம் முடிவடைகிறதோ, அந்தந்த மாநிலங்களில் தேர்தல் நடத்தப்படுகிறது. இப்போது நாடு முழுவதும் நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர் தல்களை ஒரே நேரத்தில் நடத்த வேண்டும் என்று பாஜக அரசு திட்டமிடுகிறது. இதன் நன்மை, தீமைகளை ஆராய்ந்த அரசியல் தலைவர்களும், அரசியல் நோக்கர்களும் ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ என்ற இந்தத் திட் டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

தேர்தல் நடக்கும் மாநிலத்தில் தேர்தல் அமைதியாக, நேர்மையாக நடைபெற தேர்தல் ஆணையம் பல கட்டுப்பாடுகளை, தேர்தல் நடத்தை விதிகள்(Model code of conduct) என்ற பெயரில் விதிக்கிறது. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன், நடைமுறைக்கு

வரும் இந்த விதிகளின்படி, ஆளும் கட்சி அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடாது. புதிய திட்டங்களை அறிவிக்கக் கூடாது. சாதி, மத ரீதியான பரப்புரைகளைச் செய்யக்கூடாது. பணம், பரிசுப் பொருட்களை வாக்காளர்களுக்கு வழங்குவது தடைசெய்யப்படுகிறது.

அரசியல் கட்சிகள் மற்றக் கட்சிகளின் கொள்கைகளை மட்டுமே விமர்சிக்க வேண்டும். சாதி, மத உணர்வுகளைத் தூண்டி வாக்குச் சேகரிக்கக் கூடாது. அமைச்சர்கள் அதிகாரப்பூர்வ பயணங்களை பரப்புரைக்காகப் பயன்படுத்தக்கூடாது. அரசு நிதியுதவி பெறும் பகுதிகளில் தேர்தல் விளம்பரங்கள் செய்யக்கூடாது. பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்களுக்கு முன்கூட்டியே காவல்துறையிடம் அனுமதி பெற வேண்டும். ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்த அனுமதி பெற வேண்டும். தேர்தல் நாளில் 100 மீட்டர் தொலைவுக்குள் பரப்புரை செய்யக் கூடாது. வாக்காளர்களை அரசியல் கட்சியினர் தங்களின் வாகனங்களில் அழைத்து வரக்கூடாது. தேர்தல் நடைபெறும் 48 மணி நேரங்களுக்கு (இரண்டு நாள்கள்) முன்பே அரசியல் கட்சிகள் தங்கள் பரப்புரைகளை முடித்துக்கொள்ள வேண்டும்.

தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளபோது அனுமதியின்றி 50,000 ரூபாய்க்கு மேல் ரொக்கமாகக் கொண்டு செல்லக்கூடாது. தகுந்த ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்படும் அதிகமான பணங்கள், பரிசுப்பொருட்கள் பறக்கும் படை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்படும். தகுந்த ஆவணங்களைக் காட்டினால் அதனைத் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும். நடத்தை விதிமுறைகளை மீறும் வேட்பாளர்கள் மீது குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, சிறை தண்டனை அல்லது தேர்தல் ஆணையத்தின் மூலம் பரப்புரை செய்யத் தடை விதிக்கப்படலாம். அதுபோல அதிகாரிகள் ஒரு கட்சிக்குச் சாதகமாக நடப்பதாக தேர்தல் ஆணையம் ஐயம் கொண்டாலோ, மக்களிடமிருந்து புகார்கள் வந்து அது உண்மையெனக் கருதினாலோ, அந்த அதிகாரிகளை தேர்தல் ஆணையம் இடம் மாற்றம் செய்யலாம். அல்லது குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களைப் பணிநீக்கம் செய்ய பரிந்துரையும் செய்யலாம்.

இன்றைய தேர்தல்களில் கொள்கை அரசியல் என்ற நிலைமாறி தேர்தல் அரசியல் என்று புதிய சகாப்தம் தொடங்கி விட்டது. இதற்கு எந்த அரசியல் கட்சிகளும் விதி விலக்கல்ல. இதனால் செல்வாக்கு உள்ள பெரிய கட்சிகளுடன் சிறிய கட்சிகள் போட்டி போட முடியாத சூழல் ஏற்படுகிறது. இதனால் சிறிய கட்சிகள் தங்கள் கொள்கைகளில் சமரசம் செய்து கொண்டு, ஓரிரு சீட்டுக்களையாவது பெற்று வெற்றி பெற்று தங்கள் பிரதிநிதிகள் ஆட்சி மன்றங்களில் நுழைய வேண்டும் என்ற கருத்தில் செயல்படும் போது, இன்றைய தேர்தல் அரசியல் என்பது ஆரோக்கியமான போட்டி என்ற நிலை மாறி

**‘ஆட்சியில் இருக்கும் ஒன்றிய அரசுக்குச் சாதகமான தேர்தல் ஆணையர்களை நியமித்து தேர்தலில் முறைகேடுகளை எளிதாகச் செய்ய முடியும் என்று தொடர்ந்து எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.’**

> சிறுபான்மையின மக்கள் அதிகமாக வாழும், சிறுபான்மை மக்களே வெற்றிகளைத் தீர்மானிக்கும் பல தொகுதிகளை தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் சிதைத்து விட்டார்கள். முஸ்லிம்களின் மக்கள் தொகை அடிப்படையில் எல்லா கட்சிகளிலும் சேர்த்து குறைந்தது 14 உறுப்பினர்களாவது தமிழக சட்டமன்றத்தில் இடம் பெற வேண்டும்

எப்படியும் வெற்றி பெற வேண்டும் என்ற மனநிலையில் எதையும் செய்யத் துணிந்து விடுகின்றனர்.

இப்போது அரசுகள் இலவசத் திட்டங்களை நிறைவேற்றுகின்றன. பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்படுகிற பல சலுகைகளை எதிர்க்கிற ஃபாசிஸவாதிகளின் அரசியலை சிறுபான்மை மக்கள் இனம் கண்டு கொள்ள வேண்டும். அதை அரசியல் ரீதியாக புறக்கணிக்கிற, எதிர்கொள்கிற ஒரு மனநிலையை உருவாக்கவேண்டும். சிறுபான்மை மக்கள் அனைவரும் அரசியலில் ஈடுபடவேண்டும் என்பதைவிட அவர்களை அரசியல் புரிதலுள்ளவர்களாக உருவாக்க வேண்டும். சினிமா கவர்ச்சிக்கும், கவர்ச்சியான பேச்சுகளுக்கும், இன்றைய இளைஞர்கள், பெண்கள் திசை மாறும் சூழலில் அரசியல் புரிதல் என்பது மிக அவசியமாகிறது.

தேர்தல் அரசியலில், சிறுபான்மை மக்கள் மதம், மொழி, அரசியல் ரீதியாக தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும், சமூக நீதியை நிலைநாட்டவும் தங்கள் வாக்குரிமையை ஆயுதமாகப் பயன்படுத்த முடியும். இந்தியா போன்ற பன்முகத் தன்மை கொண்ட நாட்டில், சிறுபான்மை மக்களின் வாக்குகள் பல தொகுதிகளின் வெற்றி தோல்விகளை தீர்மானிக்கும் காரணியாக இருக்கின்றன. பொதுவாக சிறுபான்மை மக்கள் மத, மொழி, கலாச்சார உரிமைக்காக, மதச்சார்பற்ற கொள்கைகளைக் கொண்ட கட்சிகளுக்கு ஆதரவு களை அளிக்கின்றனர். தங்களுடைய பிரதிநிதிகள் நாடாளுமன்றம், சட்டமன்றத்திற்குச் சென்று சட்டப்பூர்வமாக தங்களது தேவைகளை நிறைவேற்றிக் தரவேண்டும் என்று கருதுகின்றனர்.

இந்த நிலையில் பல சாதிக் கணக்கீடுகள் செய்து வேட்பாளர்கள், அமைச்சர்கள் என்று பிற சமூகங்களுக்குக் கொடுக்கும் கூட்டணித் தலைமைகள் சிறுபான்மையினருக்கு அவர்களின் மக்கள் தொகைக்கேற்ப கொடுப்பதில்லை.

உண்மையான பிரதிநித்துவ அடிப்படையில் கூட தொகுதிகளை ஒதுக்குவதில்லை. சிறுபான்மையின மக்கள் அதிகமாக வாழும், சிறுபான்மை மக்களே வெற்றிகளைத் தீர்மானிக்கும் பல தொகுதிகளை தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் சிதைத்து விட்டார்கள். முஸ்லிம்களின் மக்கள் தொகை அடிப்படையில் எல்லா கட்சிகளிலும் சேர்த்து குறைந்தது 14 உறுப்பினர்களாவது தமிழக சட்டமன்றத்தில் இடம் பெற வேண்டும் என்ற நிலையில் 5, 6 உறுப்பினர்கள் என்ற நிலையே நீடிக்கிறது. முஸ்லிம்கள் தங்கள் அரசியல் நிலைப்பாட்டை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதில்லை என்ற நிலையே இதற்கான காரணமாக அமைகிறது.

முஸ்லிம் கட்சிகள் எல்லாம் ஒன்றாக இணைந்து அழுத்தமாகக் கோரிக்கை வைத்து இருந்தால் அதிக தொகுதிகளைப் பெற்று இருக்க முடியும் என்பது அரசியல் நோக்கர்களின் கருத்தாக இருக்கிறது.

• அ.நஜ்முத்தீன்

ஜனநாயகம், நல்லாட்சி, மக்கள் உரிமை போன்ற சொற்கள் இப்போது அடிக்கடி பேசப்படுகின்றன. ஆனால் இஸ்லாம் 1447 ஆண்டுகளுக்கு முன்பே, ஆட்சிக்கும் குடிமக் களுக்கும் இடையிலான உறவைத் தெளிவான நெறிமுறைகளுடன் வகுத்துக் கூறியுள்ளது.

ஆட்சி என்பது அதிகாரக் காட்சியல்ல, அது ஓர் அமானிதம். அதே போல் குடிமகன் என்பவன் உரிமைகளைக் கோருபவன் மட்டும் அல்ல. பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்பவன்.

'(முஸ்லிம்களே!) அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான். அடைக்கலப் பொருள்களை அவற்றிற்குரியவர்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடுங்கள்; நீங்கள் மக்களி டையே தீர்ப்பு வழங்கினால் நீதத்துடன் தீர்ப்பு வழங்குங்கள். திண்ணமாக, அல்லாஹ் உங்களுக்கு வழங்குகின்ற அறிவுரை மிக உன்னதமானதாகும். திண்ணமாக, அல்லாஹ் அனைத்தையும் செவியுறுபவனாகவும் உற்று நோக்குபவனாகவும் இருக்கின்றான்'. (திருக் குர்ஆன் 4:58)

பொறுப்புள்ள பதவிகளில் தகுதியும், திறமையும், விவேகமும் அற்ற குறுகிய நோக்க முடையவர்களிடம் ஆட்சியை ஒப்படைக்கக்கூடாது என்பதற்காகவும், எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய எச்சரிக்கையாகவும் இந்த வசனம் அருளப்பட்டது.

தகுதியற்றவர்களை ஆட்சியில் அமர்த்தியதுதான் பல நாடுகள் வீழ்ச்சியுற்றதற்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்று. குடிமக்கள் துன்பத்திற்கு உள்ளானதற்கும் இதுவே காரண மாகும்.

ஆட்சியாளன் தன்னை உயர்ந்தவனாகக் காட்டிக் கொள்ளாமல் மக்களுக்குச் சேவை செய்யும் பொறுப்பாளராக என்றென்றும் நினைவு கொள்ள வேண்டும். பதவி நிரந்தரமல்ல, அதிகாரம் (பொறுப்பு) என்பது மறுமையில் கேள்வி கணக்கிற்கு உரியது என்ற எண்ணமே இருக்க வேண்டும். அதுவே இஸ்லாமிய ஆட்சியின் அடித்தளமும் ஆகும்.

நீதி இல்லாத ஆட்சி ஆட்சியே அல்ல. உறவு, இனம், மதம், ஏற்றத்தாழ்வு போன்ற எந்தக் காரணத்திற்காகவும் நீதி மாறக் கூடாது. 'என் மகள் ஃபாத்திமா திருடினாலும் அவருக்கும் தண்டனை வழங்குவேன்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறியது நீதி அனைவருக்கும் சமம் என்பதை உரத்துக் கூறுகிறது.

### *சிறந்த ஆட்சிக்கான அடையாளம்*

தனிமனிதனின் தன்னிச்சையான ஆட்சி முறையை இஸ்லாம் ஆதரிக்கவில்லை. 'அவர்கள்



தங்களின் செயல்களை ஒருவருக்கொருவர் ஆலோசனை செய்து நடத்துகின்றார்கள்'. (திருக்குர்ஆன் 42:38)

ஆட்சியாளர்கள், மக்களுடன் ஆலோசித்து முடிவெடுப்பதே சிறந்த நிர்வாகம். இது தவறான முடிவுகளையும், அநீதியைத் தடுக்கும் ஒரு பாதுகாப்பு முறையாகும். எனவேதான் கலந்து ஆலோசனை செய்வதை இஸ்லாம் வலியுறுத்துகிறது.

### அரசின் அளவுகோல்

ஓர் ஆட்சியில் பலவீனமாவனவர்கள் எப்படி நடத்தப்படுகின்றார்கள் என்பதை வைத்துத்தான் சமூக முன்னேற்றத்தை அளவிட முடியும். ஏழைகள், பெண்கள், முதியோர், சிறுபான்மையினர் ஆகியோரின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசின் கடமை.

### குடிமக்களின் பொறுப்பு

குடிமகன் என்பவன் சட்டத்தை மதித்து வாழ வேண்டியவன். வெறும் உரிமைகளை மட்டும் பேசுபவன் அல்ல; பொறுப்புகளை உணர வேண்டும் சமூக அமைதியைச் சீர்குலைக்கும் எந்தச் செயலும் தண்டனைக்குரியது.

அரசுச் சொத்து, பொதுச் சொத்து, ஊழல், மோசடி என்பது தனிநபர் குற்றம் மட்டும் அல்ல. அது சமூகத்தைச் சீரழிக்கும் தீமைகள் ஆகும்.

'...எந்த ஒரு சமூகமும் தன் பண்புகளை மாற்றிக்கொள்ளாத வரை உண்மையில் அல்லாஹ்வும் அச்சமூகத்தின் நிலையை மாற்றுவதில்லை'. (திருக்குர்ஆன் 13:11)

'உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள். தம் பொறுப்பில் உள்ளவர்களைக் குறித்து நாளை (மறுமையில்) கேட்கப்படுவீர்கள்' என்பது முஹம்மது நபி(ஸல்) அவர்களின் எச்சரிக்கையாகும்.

எனவே ஆட்சியாளார்கள், குடிமக்கள் இருவரும் தம் கடமையை உணர்ந்தால்தான் சிறப்பான நல்லாட்சி சாத்தியமாகும்.


## வெல்ஃபேர் பார்ட்டி ஆஃப் இந்தியாவின்(WPI) தமிழ்நாடு மாநிலத் தலைவராக S.N. சிக்கந்தர் தேர்வு

வெல்ஃபேர் பாராட்டி ஆஃப் இந்தியாவின்(WPI) தமிழ்நாடு மாநிலத் தலைவராகச் செயல்பட்டுவந்த K.S. அப்துர் ரஹ்மான் அந்தப் பொறுப்பிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வழக்கறிஞர் I.M.சாதிக் இடைக்கால பொறுப்புத் தலைவராக தேசியத் தலைவர் ரைசுத்தீன் அவர்களால் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் கடந்த 2026 மார்ச் 31ஆம் நாள் வெல்ஃபேர் பார்ட்டி ஆஃப் இந்தியாவின் தேசியச் செயலாளர் S.Q.R. இல்யாஸ் முன்னிலையில் நடைபெற்ற தமிழ்நாடு பொதுக்குழு K.S. அப்துல் ரஹ்மானின் இடைநீக்கத்தை உறுதி செய்து கட்சிப் பொறுப்பிலிருந்து அவரை முழுமையாக விடுவித்ததுடன் மாநில நிர்வாகக் குழுவும் கலைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மீதமுள்ள பொறுப்புக் காலத்திற்கான தலைவர் தேர்வில் S.N.சிக்கந்தர் தமிழ்நாடு மாநிலத் தலைவராக பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நாடறிந்த நாவலரும் சிறந்த மக்கள் தொடர்பாளரும் வெல்ஃபேர் பார்ட்டி ஆஃப் இந்தியாவின் தொடக்க கால உறுப்பினருமான S.N. சிக்கந்தர் தமிழ்நாடு மாநிலத் தலைவராகவும் தேசியப் பொருளாளராகவும் திறம்படச் செயல்பட்டவர்.


S.N. சிக்கந்தர்

மேடை 32

*வாசகர்கள் தாங்கள் கேட்ட உரைகளை samarasam.article@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.*

*ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பாக இந்தியா முழுவதும், குறிப்பாக தமிழ்நாட்டில் பல பகுதிகளிலும் ஈகைத் திருநாள் சமய நல்லிணக்கச் சந்திப்புகள் நடைபெற்றன. 2026 பிப்ரவரி 28ஆம் நாள் சென்னை ஷீசெல் அரங்கில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சென்னை மாநகரம் நடத்திய ஈகைத் திருநாள் சந்திப்பு நிகழ்வில்* **ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ் மாநில ஆலோசனைக் குழு உறுப்பினரும், சமரசம் இதழின் பொறுப்பாசிரியருமான வி.எஸ். முஹம்மத் அமீன்** *ஆற்றிய உரை இந்த இதழின் மேடையை அலங்கரிக்கிறது.*

# சாதியின் பக்கம் அல்ல நீதியின் பக்கம் நிற்கின்றோம்

தமிழ் மண் இன்றைக்கும் அமைதியின் பூமியாகத் திகழ்கிறது என்று சொன்னால் அதற்கு மாமன் மச்சானாக அண்ணன் தம்பிகளாக சொந்த பந்தங்களாக வாழுகின்ற இந்த உறவும், நெருக்கமும் முக்கியக் காரணம். இந்த உறவுப் பாலம் அறுந்து விடக்கூடாது, அடுத்த தலைமுறைக்கும் இது தொடர வேண்டும் என்ற விருப்பத்தினால் பெருநாள்களை சமய நல்லிணக்க விழாக்களாக, இதயங்களை இணைக்கின்ற பெருவிழாக்களாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியா முழுவதும் நடத்தி வருகிறது. இந்த அறிதலும் புரிதலும் நமக்கிடையே இல்லை என்று சொன்னால் வேறு வேறு பிழையான கருத்துகள் உருவாக்கிவிடும்.

இன்றைக்கு முஸ்லிம்களைக் குறித்து பொதுச் சிந்தனையிலே உருவாகி இருக்கின்ற சித்திரங்களைப் பாருங்கள். முஸ்லிம்கள் தீவிரவாதிகள், பழமைவாதிகள், முஸ்லிம் பெண்கள் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக ஹிஜாப் என்ற ஆடையினால் போர்த்தப்பட்டு முடக்கி வைக்கப்பட்டவர்கள், இந்த நாட்டிற்குத் தொடர்பற்றவர்கள் என்றெல்லாம் பல்வேறு பிழையான கருத்துகள் தொடர்ந்து திட்டமிட்டு பல்வேறு தளங்களிலும் களங்களிலும் பரப்பப்பட்டு வருகிறது. அதை அப்படியே நம்பி விடுகின்ற, அந்த உளவியலிலே சிக்கி விடுகின்ற அபாயம் நமக்குள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. எனவே இந்த உரையாடல் களத்தைப் பெருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சமய நல்லிணக்க விழாக்களை நாம் அறிந்து கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்குமாக ஏற்பாடு செய்திருக்கிறோம்.

ஏன் இந்த நோன்பு? ஏன் இந்தத் தொழுகை? இது எத்தகைய பயிற்சியை, மாற்றத்தை முஸ்லிம்களிடம் மட்டுமல்ல இந்தச் சமூகத்திலே நிகழ்த்தி இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இறைவன் இந்த உலகைப் படைத்தான். படைத்ததோடு தன்னுடைய பணி முடிந்துவிட்டது என்று அவன் நிறுத்திக் கொள்ளவில்லை. படைத்தவனே வழிகாட்டக்கூடிய பொறுப்பை ஏற்கின்றான். கடவுள் வழிகாட்டவில்லை என்றால் நமக்கு வழிகாட்டக் கூடியவர் யார்? மனிதர்கள் மனிதர்களுக்கே வழிகாட்டினால் அது எத்தகைய பிழையாகும் என்பதை வரலாறு நெடுகக் காணலாம். மனித வழிகாட்டுதல்கள் முரண்பட்டதாக, நாடுகளுக்கு

இடையே மாறுபட்டதாக, இனங்களுக்கிடையே, குலங்களுக்கிடையே வேறுபட்டதாகத்தான் இருக்கும். எனவே உலகம் முழுவதற்கும் ஒரு தெளிவான தீர்க்கமான நடைமுறைச் சாத்தியமான ஒரு வழிகாட்டுதலை இறைவனால் மட்டும்தான் வழங்க முடியும். எனவே எவன் படைத்தானோ அந்த இறைவனே வழிகாட்டினான்.

வழிகாட்டியதோடு தன்னுடைய கடமை முடிந்துவிட்டது என்று அவன் ஒதுங்கி விட வில்லை. அந்த வழிகாட்டும் வேதத்தை வாழ்ந்து காட்டக்கூடிய தூதர்களை பூமியினுடைய ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு காலகட்டத்திற்கும் அனுப்பி இருக்கின்றான். அதைத்தான் நாங்கள் நபிமார்கள் என்று சொல்கின்றோம் இறைத்தூதர்கள் என்று சொல்கிறோம். அந்த இறைத்தூதர்களுடைய வரிசையில் இறுதியாக வந்தவர்தான் அண்ணல் நபி(ஸல்) அவர்கள். இறைவழிகாட்டுதலின் அடிப்படையில் நீதிமிக்க, இறையச்சமுள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்கிக் காட்டினார்கள். அந்த வாழ்வை நீங்கள் திரும்பிப் பாருங்கள். அரபு மண்ணிலே 1447 ஆண்டுகளுக்கு முன்னால் நாகரிக வெளிச்சம் இல்லாத அந்தக் காலத்திலே சாதி எப்படி வேரோடு அறுத்தெறியப்பட்டது என்ற ஒரு நடைமுறைச் சாத்தியத்தை நீங்கள் புரட்டிப் பார்த்தால் இஸ்லாம் ஏற்படுத்திய அந்த மாபெரும் புரட்சி உங்களுக்கு விளங்கும். பெண்களை உயிரோடு புதைத்த அந்தக் காலத்திலே பெண்களின் விடுதலை மார்க்கமாக இஸ்லாம் எழுந்தது என்பதை நீங்கள் உணர முடியும்.

இறைவன் வழிகாட்டினான் அப்படி ஒரு சமுதாயத்தை உருவாக்கி காட்டினான். அதோடு முடிந்துவிட்டதா என்று சொன்னால் இல்லை. அவனே பயிற்சியளிக்கின்றான். இறைவனுடைய பெருங்கருணையைப் பாருங்கள். உலகத்தில் வாழக்கூடிய தன்னை கடவுளாக ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு முஸ்லிமையும் ஒரு நாளைக்கு ஐந்து வேளை தொழுகை பழக்குகிறான். காலையில் எழுந்ததும் ஒரு குழந்தை அம்மாவைத்தான் தேடும். ஒரு குழந்தை எழுந்ததும் தாய்மடியிடம் சரணடைய வேண்டும். ஒரு தாய் எழுந்ததும் தன்னுடைய குழந்தையைத்தான் தேடுவாள். தான் நேசிக்கின்ற குழந்தையை எழுந்ததும் அணைத்துக் கொள்வதைப் போல தன்னை ஏற்றுக்கொண்ட அடியார்களைக் காலை எழுந்ததும் இறைவன் அழைத்து என்னைச் சரணடையுங்கள் என்று பணிக்கின்றான் பயிற்றுவிக்கிறான், பழக்குகிறான்.

'என்னை ஏற்றுக்கொண்ட அடியார்களே உங்களுக்கு நான் பயிற்சி அளிக்கிறேன் வாருங்கள்' என்று அழைத்து தொழுகையிலே ஒரே வரிசையிலே நிறுத்திப் பழக்குகின்றான். மீண்டும் நண்பகலில் அழைக்கின்றான், மாலையில், இரவில் என ஒரு நாளைக்கு ஐந்து முறை அழைத்து தன்னோடு நெருக்கத்தை ஏற்படுத்த வழிகாட்டுகின்றான். தாயைப் பிரிந்து விளையாடினாலும் அடிக்கடி தாயிடம் வந்து தன்னைக் காட்டிக் கொள்ளும் குழந்தையைப் போல, சற்று நேரத்திற்கொரு முறை






குழந்தையைத் தேடும் தாயைப் போல இறைவனுக்கும், அடியானுக்குமான இந்த உறவும், நெருக் கமும் ஒரு நாள் கூட விடாமல் காலை முதல் இரவு வரை ஐந்து நேரம் நடக்கிறது. எனவேதான் ஒவ்வொரு முஸ்லிமும் ஒரு ஆன்மிகவாதியாக இருக்கின்றான். 'என்னைச் சரணடையுங்கள் என்னிடம் மீண்டு வாருங்கள்' என்று இறைவன் அவனைப் பயிற்றுவிக்கின்றான். தொழுகை மானக்கேடான செயல்களிலிருந்து பாதுகாக்கிறது.

இதுமட்டுமின்றி ஆண்டில் 30 நாள்கள் நோன்புவைக்கும் பயிற்சியைக் கொடுக்

கின்றான். பொய் பேசாதே புறம் பேசாதே அடுத்தவரை நீ துன்புறுத்தாதே! ஆபாசமாக நடந்து கொள்ளாதே, லஞ்சம் வாங்காதே, தீய காரியங்களில் ஈடுபடாதே என்று ஒட்டுமொத்த உலக முஸ்லிம்களுக்கும் ஆண்டுதோறும் 30 நாள்களும் இறையச்சப் பயிற்சியை வழங்குகின்றான். நோன்பு வெறும் பட்டினி இல்லை. இப்படி எல்லாம் பயிற்சி கொடுக்கப் போய்தான் முஸ்லிம் சமுதாயம் ஒரு கட்டுப்பாடான ஒழுக்க வரம்புள்ள ஒரு சமுதாயமாகத் திகழ்கிறது. எனவே இப்படிப் பட்ட ஒரு பயிற்சியை உங்களுக்கு வழங்கினான் அல்லவா அதற்கு நன்றி செலுத்துவதற்காகத்தான் இந்த ரமளான் நோன்பு.

ரமளான் மாதத்தில்தான் திருமறைக் குர்ஆன் இறக்கி அருளப்பட்டது. அதற்கு நன்றி செலுத்துவதற்காகத்தான் இந்த நோன்பு. இது எப்படிப்பட்ட குர்ஆன் என்று திருமறை விளக்கம் தருகிறது. மனித குலத்திற்கு வழி காட்டியாக வந்த வேதம் இந்தக் குர்ஆன். இது முஸ்லிம்களுக்கு மட்டுமான வழிகாட்டி அல்ல. இறைவன் எல்லாருக்குமானவன். நபி (ஸல்) அவர்கள் உலக மக்கள் அனைவருக்கும் அருட்கொடையாக அனுப்பப்பட்டவர்கள்.

இந்தக் குர்ஆன் தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்கிறது என்று அடுத்ததாக இறைவன் குறிப்பிடுகின்றான். திருமறையின் விளக்கம் சகோதர சமுதாயத்தவர்களும் விளங்கிக் கொள்ளலாம். நபிகள் நாயகம் (ஸல்) அரபு நாட்டைச் சார்ந்தவர்கள். அவர்களுக்கு அருளப்பட்ட இந்தக் குர்ஆன் அவர்களின் மொழியான அரபியில் இறங்கியது. இது பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. திருக்குர்ஆனின் தமிழாக்கத்தை நீங்கள் வாசிக்கலாம்.

ஒரு வேதம் அந்த மதத்தின் சம்பிரதாயங்களை சடங்குகளை பேசக் கூடியதாகத்தான் இருக்கும் என நீங்கள் கருதலாம். ஆனால் திருக்குர்ஆனை நீங்கள் படித்துப் பாருங்கள். வழிபாடுகளைப் பற்றி பேசுகின்ற வசனங்கள் மிகவும் குறைவு. வாழ்வியலைப் பற்றி குர்ஆன் பேசுகிறது. 'தாய் தந்தையரிடம் நல்லவிதமாக நீங்கள் நடந்து கொள்ளுங்கள்' இது குர்ஆனுடைய ஓர் வசனம். 'நீங்கள் நீதி செலுத்துங்கள் அது பெற்றோருக்கோ உற்றோருக்கோ பாதகமாக இருந்தாலும் சரி' இது ஓர் வசனம். வட்டி, லஞ்சம் வாங்காதே, மோசடி செய்யாதே, ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும் உதவுங்கள் இப்படியான அறிவுரைகளும், வழிகாட்டுதல்களும் திருக்குர்ஆனில் நிரம்பிக் கிடக்கின்றன. எனவே குர்ஆன் தெளிவான ஓர் விளக்கம்.

மூன்றாவது இந்தக் குர்ஆன் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்ட வந்த வேதம். உண்மை எது பொய் எது என்பதைப் பிரித்துக் காட்டுகிறது குர்ஆன். சத்தியம் எது அசத்தியம் எது என்று மனிதகுலம் அறியாமல் மூச்சுத் திணறி நின்ற காலத்திலே வழிகாட்டியாய் வந்ததுதான் இந்தக் குர்ஆன். ஹலால், ஹராம் என்று நாங்கள் சொல்கின்றோம். ஹலாலை ஹோட்டலில் இறைச்சி அறுப்பது மட்டும்தான் என்று பலர் சுருக்கமாகப் புரிந்து வைத்திருக்கின்றனர். ஹலால் என்பது அனுமதிக்கப்பட்டது, ஹராம் என்றால் தடுக்கப்பட்டது. இறைவனின் பெயரைச் சொல்லி அறுத்த பிராணியின் இறைச்சி ஹலால். ஆனால் அது மட்டுமே ஹலால் அல்ல.

நேர்மையாகச் சம்பாதித்தால் அது ஹலால், லஞ்சம் வாங்கினால் அது ஹராம். உழைப்பது ஹலால், திருடுவது ஹராம். மனைவியுடன் இல்லற வாழ்வில் ஈடுபட்டால், மனைவியைப் பார்த்து மகிழ்ந்தால் அது ஹலால், பிற பெண்களைப் பார்த்தால் அது ஹராம். வியாபாரம் ஹலால், வட்டி ஹராம். இப்படியெல்லாம் உங்களுக்கு இறைவன் நேர்வழி காட்டினான் அல்லவா, விளக்கத்தைத் தந்தான் அல்லவா, சத்தியத்தையும், அசத்தியத்தையும் பிரித்துக் காட்டினான் அல்லவா. அப்படிப்பட்ட வாழ்வியல் மறையைத் தந்து நேர்வழி காட்டியதற்காக நீங்கள் நன்றி செலுத்த வேண்டும் என்பதற்காகவும் இறைவனுடைய மேன்மையைப் போற்றி புகழ்வதற்குமாகவே இந்த ரமளான் நோன்பு விதியாக்கப் பட்டிருக்கிறது என்று இறைவன் கூறுகின்றான்.

இறைவன் இந்த நேர்வழியை அருளவில்லை என்று சொன்னால், மதுவை இஸ்லாம்

தடை செய்யவில்லை என்று சொன்னால் எத்தனை முஸ்லிம்கள் குடிகாரர்களாக இன்றைக்கு இருந்திருப்போம். எங்களை எல்லாம் அந்த அருவருப்பான நாற்றமிக்க கேடுகெட்ட பானத்திலிருந்து எங்கள் உதடுகளைக் காத்த இறைவா உனக்கு நன்றி என்று சொல்லக்கூடிய அந்த நன்றித் திருநாள்தான் இந்தப் பெருநாள். மது ஹராம் இல்லை என்று சொன்னால் எத்தனை முஸ்லிம்கள் குடித்து விட்டு வீதியில் கிடப்போம், மனைவியை, தாய் தந்தையை அடித்திருப்போம். ஒட்டுமொத்த உலக முஸ்லிம்களையும் மது என்ற பானத்திலிருந்து தடுத்து நிறுத்தினானே இறைவன் அந்த நேர்வழிக்கு நன்றி செலுத்த வேண்டாமா? இன்றைக்கு மதுவிலிருந்து ஒருவனை மீட்டெடுக்க என்ன பாடுபட வேண்டி இருக்கிறது. ஆனால் முஸ்லிமாக வாழ்ந்தால் மது என்ற பெரும் தீமையிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ளலாம்.

வட்டி இஸ்லாத்தில் தடுக்கப்படவில்லை என்று சொன்னால் ஹராமாக்கப்படவில்லை என்று சொன்னால் எத்தனை முஸ்லிம் குடும்பங்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கும். எங்கள் குடும்பங்கள் வட்டியிலே மூழ்கி நாங்கள் பெரும் இழப்பில் ஆழ்ந்திருப்போம். வட்டி என்ற அந்தப் பெரும் தீமையில் இருந்து, அந்தப் பொருளாதாரப் புதைகுழியில் இருந்து எங்களை இறைவன் மீட்டெடுத்திருக்கின்றான் அல்லவா அதற்கு நன்றி செலுத்துவதற்காக, அதற்கு நேர்வழி காட்டியதற்காக, அதற்காக இந்தக் குர்ஆன் அருளியதற்காக நன்றி செலுத்துவதற்காக இந்த ரமளான், இந்தப் பெருநாள்.

வட்டியிலிருந்து எங்களைக் காப்பாற்றியது மட்டுமல்ல, யாசகம் கேட்கக்கூடிய இழிவான சமுதாயமாக இல்லாமல் கொடுக்கக்கூடிய பெரும் கொடைச் சமுதாயமாக இஸ்லாம் திகழ்கிறது. ஒவ்வொரு முஸ்லிமும் பெருங்கொடையாளன். தன்னுடைய சொந்தச் சம்பாத்தியத்தில் இருந்து அவன் கணக்கிட்டு இரண்டரை விழுக்காடு ஏழைகளுக்கு ஜகாத் கொடுத்தே ஆக வேண்டும் என்பதை அறமாக, கடமையாக வைத்தது இஸ்லாம். அறிவுறுத்தலாக அல்ல வழிகாட்டுதலாக வைத்ததினால்தான் ஈகையைப் பெருங்கடமையாகக் கொண்டு ஈகைத் திருநாள் என்று இந்த நோன்புப் பெருநாளைச் சொல்கிறோம். ஈகைச் சமுதாயத்தை உருவாக்கிய இறைவனுக்கு நன்றி செலுத்துவதுதான் இந்தப் பெருநாள். ஒரு தீபாவளிக்கு, ஒரு பொங்கலுக்கு, ஒரு புத்தாண்டுக்கு எத்தனை கோடி மது விற்பனை நடக்கும். ஆனால் ஒரு பெருநாளைக்கு பல்லாயிரம் பல்லாயிரம் கோடி ரூபாய்களை நாங்கள் தானமாக, ஜகாத்தாக வழங்க வேண்டும்.

சாதிய அழுக்குகளிலே உழன்று கொண்டிருக்காமல், சாதியின் பெயரால் ஒருவனை அடித்து துன்புறுத்தும் சூழலில், ஏற்றத்தாழ்வுகளில் அமிழ்ந்து கிடக்காமல் சாதி ஏற்றத்தாழ்வுகளற்ற ஒரே சமுதாயமாக ஒரே நேர் கோட்டில் நிறுத்தியதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம். சாதிக் கொடுமைகளை எதிர்த்து பெரும் பெரும் தலைவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சாதி எதிர்ப்பு இயக்கத்தைக் கட்டி எழுப்புகிறார்கள். சாதியை ஒழித்து விட வேண்டும் என்று இந்த உலகம் போராடிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஒருவன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டாலே சாதிய அழுக்குகள் அவனை விட்டு நீங்கி விடுகின்றன. எனவேதான் தந்தை பெரியார் ‘சாதிய இழிவு நீங்க வேண்டும் என்று சொன்னால் இஸ்லாமே நன்மருந்து’ என்றார். கல்வியால், அரசியல் அதிகாரங்களினால் சாதியை ஒழித்து விட முடியாது. நாட்டுடைய ஜனாதிபதியாக இருந்தாலும் பட்டியலினத்தவராக இருந்தால் கோயிலுக்குள் சென்றால் கழுவி விடுவார்கள். நீங்கள் எவ்வளவு உயரிய பதவியில் இருந்தாலும் உங்களுக்கு உயர் சாதியிலிருந்து பெண் தர மாட்டார்கள்.

முஸ்லிம்கள் நாங்கள் ஏன் தமிழில் பெயர் வைக்கவில்லை தெரியுமா? நாங்கள் தமிழர்கள். மொழியை நேசிப்பவர்கள். நோன்பு என்று தூய தமிழிலே சொல்லக்கூடியவர்கள், பசியாறி விட்டீர்களா என்று தூய தமிழில் எங்கள் பகுதியிலே கேட்போம். இந்த மண்ணுக்கும் மொழிக்காகவும் பாடுபட்டவர்கள் முஸ்லிம்கள். பல்லாயிரம் அறிவியல் தமிழ்ச் சொற்களைத் தந்த மணவை முஸ்தபா போன்ற

தமிழறிஞர்களைக் கொண்ட சமுதாயம். ஆனாலும் தமிழில் பெயர் வைக்கவில்லை. தமிழ் பெயரில் சாதியைத் தேடும் சூழல் இருக்கிறது. நம்முடைய பெயரில், தந்தையின் பெயரில், வசிக்கும் ஊரை வைத்து சாதியைக் கண்டுபிடிக்க முயல்வார்கள். முஹம்மது அமீனிடம் சாதியைத் தேட முடியாது. சாதியை என்னுடைய பெயரிலேயே அடியோடு அறுத் தெறிந்த மார்க்கம் இஸ்லாம். எனவேதான் முஸ்லிம் பெயர் வைத்தால் ஒரே மனித குலத் தினுடைய அங்கமாக அவன் மாறிவிடுகிறான். உலகக் குடிமகனாக அவன் மாறிவிடுகிறான்.

இரத்தத்திலே ஊறியது சாதிய உணர்வுகள், இன உணர்வுகள், மொழி உணர்வுகள், நாட்டு உணர்வுகள். இந்தியன் என்ற அந்த உணர்வு எனக்கு இருக்கும். தமிழ் மொழி என்னை ர்க்கும். ஆனால் அதையும் தாண்டி நீதிக்காக ஒருவனை நேசிக்க வேண்டும் என்கிறது இஸ்லாம். இன்றைக்கு உலகம் மிகப்பெரிய போரைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. ஈரான் தன்னந்தனி நாடாக நின்று உலக வல்லாதிக்க நாடுகள் என்று சொல்லக் கூடிய அமெரிக்காவையும், உலகின் மிகப் பெரிய ராணுவத்தை வைத்திருக்கின்ற இஸ்ரேலையும் எதிர்த்து நிற்கிறது. ஒரு மாத காலமாகத் தாக்குப்பிடித்து அவர்களை மூச்சு திணற ஈரான் தாக்கி துவம்சம் செய்திருக்கிறது. இந்த யுத்தத்திற்கு எண்ணெய் வளம், அணு ஆயுதம், ஆட்சி மாற்றம் எனப் பல காரணங் களைச் சொன்னாலும் அடிப்படைக் காரணம் அகன்ற இஸ்ரேலுக்கான திட்டமும், உலக வல்லாதிக்கத்திற்கான அமெரிக்காவின் ஆதிக்க மும்தான் காரணம். ஃபலஸ்தீனை இஸ்ரேல் தாக்கும்போது அரபு நாடுகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன. மத்திய கிழக்கில் ஈரான் மட்டுமே இந்த அராஜகத்தை எதிர்த்து நிற்கிறது. அதனால் ஈரானைத் தாக்குகிறார்கள்.

அரபு நாடுகள் சன்னிகள். ஃபலஸ்தீன் சன்னிகள். நாங்கள் சன்னிகள். ஈரான் ஷியா. இந்த உணர்வு எங்களை உள்ளபடியே சன்னிகளான அரபு நாட்டோடு, கத்தாரோடு, குவைத்தோடு, துபாயோடு, பஹ்ரைனோடு சேர்த்திருக்க வேண்டும். ஆனால் அந்த இன உணர்வு அந்த சாதிய உணர்வு இஸ்லாத்தில் இல்லை. எனவே நாங்கள் சாதியின் பக்கம் நிற்பதில்லை நீதியின் பக்கம் நிற்கிறோம். எனவேதான் ஷியாவாக இருந்தாலும் ஈரானின் பக்கம் நாங்கள் இருக்கிறோம். இந்த சாதி உணர்வு இஸ்லாத்தில் இல்லை. அத னால்தான் சன்னிகளான ஃபலஸ்தீனுக்காக ஷியாக்களான ஈரான் குரல் கொடுக்கிறது. அங்கே சாதி உணர்வு இல்லை. நீதி உணர்வு இருக்கிறது. எனவே இஸ்லாம் சாதியின் பக்கம் அல்ல நீதியின் பக்கம் நிற்கிறது.

ஃபலஸ்தீனிலே இன்று நடப்பது இனப்படுகொலை என்று ஐநா மன்றமும் சர்வதேச மனித உரிமை மன்றமும் சொல்லு கின்றது. நெத்தன்யாகு சர்வதேச போர்க்குற்ற வாளி. இஸ்ரேலின் அராஜகத்திற்கும், அமெரிக் காவின் அட்டூழியத்திற்கும் எதிராக, நீதிக்காக நாம் குரல் எழுப்ப வேண்டும். நீதியின் பக்கம் நிற்க வேண்டும் என்பதைத் திருக்குர்ஆன் கட்டளையாகவே சொல்கிறது. ‘சத்தியம் வந்தது அசத்தியம் அழிந்தது அசத்தியம் அழிந்தே தீரும்’ என்கிறது குர்ஆன். அசத்தியம் அழிய வேண்டுமென்றால் சத்தியம் நிலைத்திருக்க வேண்டும். தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் என்றால் தர்மம் வர வேண்டும். இந்த தர்மத்தை நிலைநிறுத்த வேண்டும். இந்த நீதியை நிலை நிறுத்த வேண்டும்.

நீதியை நிலைநிறுத்தினால் தான் அமைதி நிலைபெறும். நீதி இல்லாத உலகத்திலே அமைதி இருக்காது. எனவே நீதி நிலை பெற வேண்டும் என்று சொன்னால் அமைதி நிலைபெற வேண்டும். அமைதி இருந்தால் தான் இணக்கம் மேலோங்கும். இணக்கமும் அமைதியும் இருந்தால்தான் அங்கே பாது காப்பு இருக்கும். இது எல்லாம்தான் இந்த நோன்புத் திருநாள் தருகின்ற செய்தி.

எனவே இந்தக் கருணையின் மார்க்கத்தை, அன்பின் மார்க்கத்தை, நீதியின் மார்க்கத்தை நீங்கள் நெருங்கி வாசிப்பதற்கும் நேசிப் பதற்கும் இதுபோன்ற உரையாடல் களங்கள் தொடர வேண்டும். அதற்கான ஓர் அழகிய முன்னெடுப்புதான் இந்த ஈகைத் திருநாள். இணைந்திருப்போம். தொடர்ந்திருப்போம்.

அல்லாஹ்வின்
விருந்தாளிகளின்
சேவையில்
31வது
வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

TRUST WORTHY

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

தொடர்பு கொள்வீர்
சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

# இப்லீசுக்கு எந்த அதிகாரமும் இல்லை

**அவர்களின் விவகாரத்தில் இப்லீஸ் தன் எண்ணம் சரியாக நிறைவேறக் கண்டான். மேலும், அவர்கள் அவனையே பின்பற்றினார்கள், இறைநம்பிக்கையாளர்களின் ஒரு சிறு பிரிவினரைத் தவிர![35] இப்லீசுக்கு அவர்கள் மீது எந்த அதிகாரமும் இருக்கவில்லை. ஆனால் (இதெல்லாம் நடந்தது) மறுமையை நம்புகின்றவர் யார், அதைப்பற்றி ஐயம் சொல்கின்றவர் யார் என்பதை நாம் கண்டறிந்து கொள்வதற்காகத்தான்![36] உம் இறைவன் ஒவ்வொன்றையும் கண்காணிக்கக் கூடியவனாக இருக்கின்றான்.[37]**

● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனங்கள் : 20, 21

**35.** இறைவன் அல்லாத பிற தெய்வங்களுக்குப் பதிலாக ஏக இறைவனை மட்டுமே ஏற்றுக்கொண்டிருந்த மக்கள் குழுவினர் தொன்மைக் காலத்தில் இருந்தே ஸபா நாட்டில் வசித்து வந்தார்கள் என்பது வரலாற்றிலிருந்து தெரிய வருகின்றது. இன்றையக் காலத்து தொல்லியல் ஆய்வுகளின் போது ஏமன் நாட்டு பாழடைந்த சிதிலங்களுக்கு நடுவில் கிடைத்த கல்வெட்டுகளில் சிலவற்றில் இந்த மக்களைப் பற்றிய குறிப்புகளைப் பார்க்க முடியும். ஸபா நாட்டில் ஏராளமான இடங்களில் து ஸமாவி அல்லது து ஸமவி (அதாவது வானங்களின் இறைவனை) மட்டும் வழிபடுவதற்கான பிரத்யேக வழிபாட்டுத்தலங்கள் இருந்துள்ளன.

இது குறித்த விவரங்கள் தொல்லியல் ஆய்வாளர்களால் தோண்டியெடுக்கப்பட்ட சற்றொப்ப கி.மு.650 காலகட்டத்திய கல்வெட்டுகள் சிலவற்றில் இடம் பெற்றுள்ளன. சில இடங்களில் ‘மாலிகுன் து ஸமவி - வானங்களின் அதிபதியான இறைவன்’ என்கிற பெயர் எழுதப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட மக்கள் இடைவிடாமல் பல நூற்றாண்டுகாலம் இந்த நாட்டில் இருந்திருக்கின்றார்கள். இவ்வாறாக, கி.பி.378ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்றில் ‘இலாஹி சு ஸம்வி’ என்கிற பெயரில் வழிபாட்டுத்தலம் ஒன்று கட்டப்பட்டதைப் பற்றிய விவரத்தைப் பார்க்க முடிகின்றது.

அடுத்து கி.பி.465ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்றில் ‘வானங்களின் பூமியின் அதிபதியான இறைவனின் உதவியோடும் அருளோடும்’ என்கிற வாசகங்கள் இடம் பெற்றுள்ளன. இதே காலகட்டத்தைச் சேர்ந்த மற்றுமோர் கல்வெட்டில் (கி.பி.457 கல்வெட்டு ஒன்றில்) அந்தக் கடவுளைக் குறிப்பிடுவதற்கு ரஹ்மான் என்கிற சொல் ஆளப்பட்டுள்ளது. அதாவது ‘பர்தாரர் ரஹ்மானன்’ (ரஹ்மானின் உதவியோடு) என்கிற சொற்கள் ஆளப்பட்டுள்ளன.

28 ஆம் பக்கம் பார்க்க...

● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

# வேண்டாம் வெற்றுப் பேச்சு!

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

**‘இறைவனை நினைவு கூராமல் நிறைய பேசிக் கொண்டே இருந்து விடாதீர்! ஏனெனில் இறைவனை நினைவுகூராமல் வெற்றுப் பேச்சில் ஈடுபடுவது இதயத்தை இறுகச் செய்து விடும். மேலும், நினைவில் வையுங்கள். கடின உள்ளம் கொண்டவன்தான் இறைவனை விட்டு வெகுதொலைவில் இருப்பான்.’**

அறிவிப்பாளர் : இப்னு உமர்(ரலி)
நூல் : திர்மிதி

எந்நேரமும் இறைவனுக்கு நெருக்கமாக இருப்பதுதான் மனித வாழ்வின் வெற்றிக்கான அசல் இரகசியம் என்பதை இந்த நபிமொழி உணர்த்துகின்றது. இறைவனை நினைவுகூர்வதும் எந்நேரமும் அவனுடைய நினைவாக இருப்பதும்தாம் மனிதனை இறைவனுக்கு நெருக்கமானவனாக ஆக்கும்.

இறைநினைவுதான் இதயத்துக்கான அசல் உணவும்கூட. இதயத்தை இளகச் செய்வதும் மென்மையாக்குவதும் இறை நினைவுதான். இதயத்தின் மென்மையும் மிருதுவும் இதமும்தான் இதயத்தின் உண்மையான யதார்த்தம் ஆகும்.

இதயத்தில் மென்மை எஞ்சியிருக்கவில்லையெனில் அது இதயமாகவே இருக்காது. இதயம் இல்லாமல் போகும்போது மனிதனுக்கு இறைவனும் இல்லாமல் போய் விடுவான். ஏனெனில் மனிதன் தன் இதயத்தைக் கொண்டுதான் தன் அதிபதியோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறான்.

இதயம் இறுகிப்போவதற்கும் கல்மனதிற்கும் வெட்டிப் பேச்சுதான் காரணமாகின்றது என்பதை இந்த நபிமொழி தெளிவுபடுத்துகின்றது. அதிகமாகப் பேசுபவன் பொதுவாக தன்னைக் குறித்தே தான் அதிகமாகப் பேசுபவனாக இருப்பான். எந்நேரமும் அத்தகைய சொந்தக் கதைகளிலேயே அக்கறை செலுத்துபவனாக இருப்பான். அவன் மற்றவர்களின் பேச்சைக் காது கொடுத்துக் கேட்பதிலும், அவர்களின் கருத்தைப் புரிந்துகொள்வதிலும் அவனுக்கு அதிகமான ஈடுபாடும் இருக்காது. அவர்களின் பேச்சில் சத்தியம் இருந்தாலும் சரியே.

இத்தகைய வாயாடி குணம் கொண்டவர்கள் எப்போதும் மக்களுடன் சேர்ந்து இருப்பதையும், அதிகதிகமானோரை நண்பர்களாக்கி நட்பு வட்டத்தை விரிவுபடுத்துவதையும் மிக அதிகமாக விரும்புவார்கள். தமது பேச்சை மற்றவர்கள் மீது திணிப்பதற்கு வாய்ப்பை அதிகரித்துக்கொள்வதற்காகவே அவர்கள் இவ்வாறு செய்வார்கள். இவர்களின் இந்தக் குணம் வாழ்வின் அடிப்படை இலட்சியங்களிலிருந்து இவர்களைத் திசை திருப்பி விடும். மனிதர்களுக்கான மனநிம்மதியை இறைவன் எங்கு வைத்துள்ளான் என்பதையும் மறந்து விடுவார்கள்.

நபிமொழி விளக்கம் ✸ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✸ தமிழில் : அபூ ஹானியா

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

**36.** இறைநம்பிக்கையாளர்களின் எண்ணம் இறைவனுக்கு அடிபணிந்து வாழவேண்டியதாக இருக்க, அவர்களின் கைளைப் பிடித்து இழுத்து அவர்களை வலுக்கட்டாயமாக இறைவனுக்கு மாறு செய்கின்ற பாதையின் பக்கம் கொண்டு செல்கின்ற சக்தியோ வலிமையோ இப்லீசுக்கு இல்லை. வல்லோன் அல்லாஹ் அவனுக்குக் கொடுத்ததெல்லாம் எந்த அளவிலான சக்தி எனில் அதைக் கொண்டு அவனால் அவர்களைத் தூண்டி விடவும், தன்னைப் பின்பற்றி நடக்க விரும்புகின்ற மக்கள் அனைவரையும் தனக்குப் பின்னால் திரட்டிக் கொள்ளவும் தாம் முடியும். மேலும் இவ்வாறு ஆள்களைக் கடத்துவதற்கான வாய்ப்புகள் இப்லீசுக்கு எதற்காகத் தரப்பட்டன எனில் மறுமையை நம்புபவர்கள் யார், அதன் வருகை குறித்து ஐயத்தில் இருப்பவர்கள் யார் என்பது வெளிப்பட வேண்டும் என்பதற்காகத்தான்.

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் இந்த உலகத்தில் நேர் வழியில் மனிதன் நிலைத்திருப்பதற்கான உத்தரவாதமாக இருப்பது மறுமைக் கோட்பாட்டைத் தவிர வேறு எதுவும் இல்லை என்கிற பேருண்மையைத்தான் இந்த இறைவாக்கு தெளிவுபடுத்துகின்றது. மரணத்திற்குப் பிறகு தாம் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுவோம்; அல்லாஹ்வுக்கு முன்னால் தம்முடைய செயல்கள் அனைத்துக்கும் பதில் சொல்வதற்காக நிறுத்தப்படுவோம்; அதற்கான விசாரணை நடக்கும் என்பதையெல்லாம் ஒருவர் ஏற்க மறுக்கின்றார் எனில் அவர் திண்ணமாக வழிகெட்டுப் போவார்; தீய வழியில் சீரழிந்தே தீருவார்.

ஏனெனில் ஒரு மனிதனை நேர்வழியில் நிலைத்திருக்கச் செய்கின்ற பொறுப்புணர்வு அவருக்குள் இம்மியளவுகூட உருவாகாது. இதனால்தான் மறுமையைப் பற்றிய அலட்சியம் எனும் மாய வலையில் சிக்கவைப்பதுதான் எந்தவொரு நம்பிக்கையாளரையும் வழிகெடுப்பதற்காக ஷைத்தான் ஆளுகின்ற மிகப்பெரும் உத்தியாக இருக்கின்றது. எவர் அவனுடைய இந்த மாய வலையில் சிக்காமல் தப்பித்துக் கொள்கின்றாரோ அவர் ஒருபோதும் இந்தத் தற்காலிக வாழ்வின் நலன்களுக்காக தன்னுடைய உண்மையான, நிலையான வாழ்வின் நலன்களைத் தியாகம் செய்ய ஆயத்தமாக மாட்டார்.

இதற்கு நேர்மாறாக எவர் ஷைத்தானின் பிடியில் சிக்கி மறுமையை ஏற்க மறுத்து விடுகின்றாரோ அல்லது குறைந்தபட்சம் மறுமை குறித்து ஐயத்தில் விழுந்து விடுகின்றாரோ அவர் வெறுமனே பிற்பாடு வரக்கூடிய ஏதோவொரு வாழ்வில் இழப்பைச் சந்திக்க நேரிடுமோ என்கிற ஒரே ஓர் அச்சத்தின் காரணமாக உலக இலாபங்களுக்கான பேரத்திலிருந்து ஒருபோதும் பின்வாங்கி விடவும் மாட்டார்; அவற்றைக் கைவிடவும் மாட்டார். உலகத்தில் எவரெல்லாம் எப்போதெல்லாம் வழிகெட்டிருக்கின்றாரோ அவர் இதே மறுமை மறுப்பினால் அல்லது மறுமை மீதான ஐயத்தில் விழுந்துவிட்ட காரணத்தினால்தான் வழிகெட்டிருக்கின்றார். மேலும் எவரெல்லாம் நேர்வழியை மேற்கொண்டிருக்கின்றாரோ அவருடைய அந்தச் சரியான நடத்தைக்கு மறுமைக் கோட்பாடு மீதான அவருடைய நம்பிக்கை தான் உறுதியான அடித்தளமாக இருக்கும்.

**37.** ஸபா சமூகத்தாரின் வரலாற்றை உணர்த்துகின்ற விதத்தில் மகத்துவம் மிக்க குர்ஆனில் தரப்பட்டிருக்கின்ற இந்தக் குறிப்புகளைப் புரிந்துகொள்வதற்கு ஸபா நாடு தொடர்பாக பிற வழிவகைகளிலிருந்து கிடைத்துள்ள வரலாற்றுத் தகவல்களையும் ஒரு பார்வை பார்த்துவிடுவது அவசியமாகும்.

வரலாற்றின் ஒளியில் பார்க்கின்றபோது பெரும் பெரும் கோத்திரங்களைக் கொண்ட தெற்கு அரேபியாவின் ஒரு மிகப்பெரும் நாடாகத்தான் ஸபா இருந்தது. இமாம் அஹ்மத், இப்னு அபி ஹாதிம், இப்னு அப்துல் பர், திர்மிதி ஆகியோர்

பதிவு செய்துள்ள அறிவிப்பில், ஸபா என்பது ஒரு மனிதரின் பெயர் என்றும், அந்த மனிதரின் சந்ததியினராக அரபு மண்ணில் கிந்தா, ஹிம்யார், அஸ்த், மத்ஹிஜ், அன்மார் (கத்ஹம், பாஜிலா ஆகிய இரண்டு கிளைக் கோத்திரங்களைக் கொண்டது), அமிலாஹ், ஜுத்தாம், லக்ஹ்ம், கஸ்ஸான் ஆகிய கோத்திரங்கள் உருவாயின என்றும் நபிகளார்(ஸல்) அறிவித்த விவரம் இடம் பெற்றுள்ளது.

தொன்மையான காலத்திலிருந்தே அரபுலகில் ஸபா நாடும் சமூகத்தாரும் மிகவும் புகழ்பெற்று விளங்கினார்கள். (இப்ராஹீம் நபியின் காலத்தில்) கி.மு 2500இல் 'ஊர்' நகரத்து கல்வெட்டுகளில் ஸாபோம் என்கிற பெயரால் இந்த நாடு குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிறகு பாபிலோனிய, அஸீரீய பேரரசுகளின் கல்வெட்டுகளிலும், பைபிளிலும் கூட அது பற்றிய குறிப்புகளைப் பார்க்க முடியும். (எடுத்துக்காட்டாக, பார்க்க பைபிள்: திருப்பாடல்கள் 72:15; எரேமியா 6:20; எசக்கியேல் 27:22, 38:13; யோபு 6:19). கி.மு.288 காலத்து தியோஃபிரஸ்டஸ் முதல் பல்வேறு கிரேக்க, ரோமானிய வரலாற்று அறிஞர்கள் பல நூற்றாண்டுகள் வரை தொடர்ந்து இந்த நாட்டைக் குறித்து குறிப்பிட்டு வந்திருக்கின்றார்கள்.

இன்று ஏமன் என்கிற பெயரில் புகழ் பெற்றுள்ள, அரபுலகின் தென் மேற்கு மூலையில் அமைந்திருக்கின்ற நாடுதான் இவர்களின் நாடு ஆகும். இவர்களின் எழுச்சிக் காலம் கி.மு. 1100 முதல் தொடங்குகின்றது. தாவூத்(அலை), சுலைமான்(அலை) காலத்தில் செல்வச் செழிப்புமிக்க, வளம் கொழிக்கின்ற நாடாக இது திரும்பும் திசையெங்கும் மிகப் பெரும் புகழ் பெற்றிருந்தது. தொடக்கத்தில் இந்த சமூகத்தார் சூரியனை வழிபடுபவர்களாய் இருந்தார்கள்.

சுலைமான்(அலை) அவர்களின் கைகளில் கி.மு.965-966 ஆண்டுவாக்கில் இவர்களின் அரசி ஏக இறைவன் மீது நம்பிக்கை கொண்ட பிறகு இந்த நாட்டு மக்களில் பெரும்பாலோரும் முஸ்லிம்களாகியிருக்க வேண்டும். ஆனால் பிற்பாடு எந்தக் காலத்தில் இவர்கள் மத்தியில் இணைவைப்பும் சிலை வழிபாடும் மீண்டும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது என்பதும் இவர்கள் மீண்டும் அல்மக்கா (சந்திரக் கடவுள்), அஷ்தர் (வெள்ளிக் கிரகம்), ஜாதே ஹமீம், ஜாதே பஅதான் (சூரியத் தேவி), ஹோபஸ், ஹர்மத்தம், ஹரீமத் போன்ற இன்னும் ஏராளமான தெய்வங்களையும் தேவிகளையும் வழிபடத் தொடங்கியது எப்போது என்பதும் தெரியவில்லை. இவர்கள் கொண்டாடி வந்தவற்றில் அல்மக்கா தான் மிகப் பெரும் தெய்வமாக இருந்தது.

மேலும் இவர்களின் அரசனும்கூட தன்னை அந்தத் தெய்வத்தின் பிரதிநிதியாக நினைத்தான். அதன் அடிப்படையில் தன்னை கீழ்ப்படிதலுக்கு உரியவனாக அறிவித்துக் கொண்டான். இன்னும் சொல்லப்போனால் நாடு முழுவதும் விதவிதமான தேவி, தெய்வங்கள் நிறைந்திருந்தன என்பதும், அதிலும் குறிப்பாக அல்மக்கா என்கிற சந்திரக் கடவுளுக்கான கோயில்கள்தான் எல்லா இடங்களிலும் இருந்தன என்பதும், அவர்கள் எல்லா முக்கியமான சந்தர்ப்பங்களிலும் அந்த சந்திரக் கடவுளுக்கு நன்றி செலுத்தி வந்தார்கள் என்பதும் ஏமன் நாட்டில் கிடைத்த ஏராளமான கல்வெட்டுகளிலிருந்து நமக்குத் தெரிய வருகின்றது.

ஏமனில் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சிகளின் மூலமாக கண்டெடுக்கப்பட்ட சற்றொப்ப 3 ஆயிரம் கல்வெட்டுகளிலிருந்து இந்தச் சமூகத்தாரின் வரலாறு பற்றிய முக்கியமான தகவல்கள் கிடைத்துள்ளன. அவற்றுடன் அரபி அறிவிப்புகள், ரோமானிய, கிரேக்க வரலாற்று ஆவணங்கள் போன்றவற்றிலிருந்து கிடைத்த தகவல்களையும் சேர்த்துக் கொள்வோமேயானால் இந்தச் சமூகத்தாரின் வரலாற்றை விரிவாகவே தொகுத்துவிட முடியும்.

*(தொடரும்)*

**● எம். நூருல் அமீன்**

2026 நிலவரப்படி உலக அளவில் சுமார் 208 கோடி முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இது மொத்த மக்கள் தொகையில் சுமார் 25 விழுக்காடு ஆகும். இந்தியாவில் 22 கோடி (15%) முஸ்லிம்களும், தமிழ்நாட்டில் 45 லட்சம் முதல் 50 லட்சம் வரையிலான முஸ்லிம்களும் (6%) வாழ்கின்றனர்.

சமூக, பொருளாதார புள்ளி விவரங்களின்படி (சச்சார் கமிட்டி, அண்மைக்கால ஆய்வுகள்), இந்திய முஸ்லிம்களின் நிலை கவலைக்குரியதாக மட்டுமில்லாமல் கவனிக்க வேண்டிய கட்டாயத்திலும் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. கல்வியில் தமிழக முஸ்லிம்களின் பங்களிப்பு தேசிய சராசரியை விடக் குறைவாகவும், பொருளாதாரத்தில் சுமார் 31% முஸ்லிம்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழேயும் வாழ்கின்றனர். தமிழக அரசுப் பணிகளில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் மிக மிகக் குறைவாகவே (5%க்கும் கீழ்) இருக்கிறது.

முஸ்லிம்கள் பெரும்பாலானோர் சுய தொழில் செய்பவர்களாகவும், நடைபாதை வியா பாரிகளாகவும், சிறு வணிகங்களையே நம்பி வாழ்பவர்களாகவும், சமையல்காரர்களாகவும், இறைச்சி வியாபாரிகளாகவும், அன்றாடக் கூலிகளாகவும், பிறந்த ஊரை விட்டு வெளி ஊர்களிலும், வெளி நாடுகளிலும் கடை நிலை ஊழியர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலைகளில் இருந்து மாற, உரிமைகளைச் சட்டப்பூர்வமாகப் பெற முஸ்லிம்கள் அரசியல் விழிப்பு உணர்வு பெறுவது அவசியம். இஸ்லாமிய சமூக அமைப்புகள் தமிழ்நாட்டில் நிறையவே இருந்தாலும் அரசியல் அதிகாரம் தமிழக முஸ்லிம்களிடம் வெறுமையாகவே உள்ளது.

இஸ்லாமியத் தத்துவத்தில் அதிகாரம் அமானிதமாக(பொறுப்பு ஒப்படைப்பு) மதிக் கப்பட்டு, இறைவனிடமே அதிகாரமும்(Sovereignty of Allah), மனிதர்கள் அவனது பிரதி நிதிகளாகவும்(கலீஃபா) செயல்படுவதாகும். அதிகாரம் மக்களின் விருப்பத்தின் பேரி லேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆட்சியாளர், தகுதியுள்ளவர்களுடன் ஆலோசித்தே செயல்படும் வகையில் இருப்பதே அதிகாரம் (Shura) என்கிறது இஸ்லாம்.

அதிகாரப் பங்கீடானது(Separation of Powers) அதிகாரம் ஓரிடத்தில் குவியாமல் மூன்றாகப் பிரிக்கப்பட்டு சட்டங்களை உருவாக்க சட்டமன்றமும்(Legislative) நடைமுறைச்



சட்டங்களைச் செயல்படுத்த நிர்வாகத்துறை யும்(Executive), அதை நீதியுடன் நிலை நாட்டுவதற்கு நீதித்துறையும்(Judiciary) ஜன நாயக நாட்டில் தேவைப்படுகிறது. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டே முஸ்லிம்கள் தேர்தலைச் சந்திக்க வேண்டும்.

'எந்த ஒரு சமுதாயத்தவரும் தம் நிலை யைத் தாமே மாற்றிக் கொள்ளாத வரையில், நிச்சயமாக இறைவன் அவர்களை மாற்று வதில்லை..' என்ற திருக்குர்ஆன் வசனத்தை (13:11) நினைவில் கொள்ள வேண்டும்.

நம் நாட்டு அரசியல் சமூகத்தின் ஒவ் வொரு அங்கத்தையும் தீர்மானிக்கும் சக்தி என்பதை யாராலும் மறுக்க முடியாது. சமூகம், அரசியல், பொருளாதாரம், கல்வி, பாதுகாப்பு என அனைத்திலும் மேம்பட்டவர்களாக வாழ் வதற்குத் தேவையான அடிப்படை விஷ யங்கள் பற்றிய ஞானம் முஸ்லிம் சமுதாயத் திடம் இருக்க வேண்டும்.

'அரசியல் நமக்குத் தேவையில்லை' என்று ஒதுங்கி நிற்பதும், வாக்களிக்காமல் இருந்து விடுவதும், நம் உரிமைகளை நாம் பறி கொடுப்பதற்குச் சமம். 'என் ஓட்டு என் உரிமை. அதை நோட்டாவுக்குப் போடுவதே பெருமை' என வாக்கை வீணடித்துவிடக் கூடாது.

வாக்குரிமை என்பதை பொறுப்பு (அமானத்) என்கிறது இஸ்லாம். அதை முறை யாகப் பயன்படுத்த வேண்டும். இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் தேர்தல் அரசியல் என்பது சமூகக் கடமை. நீதியை நிலைநாட்டுகின்ற வழிமுறையாகும். தகுதியான ஒருவரைத் தேர்ந்தெடுப்பதே இஸ்லாமிய வழிமுறை. கவர்ச்சிக்காவோ, அழகுக்காகவோ, ஆசைக் காகவோ, வாக்களிக்கக் கூடாது. வாய்ப்புக் கொடுத்துப் பார்ப்போமே ஒரு முறை என்று வாக்களித்து ஏமாந்துவிடவும் கூடாது.

மக்களைப் பாதுகாக்க நமக்குக் கிடைக்கும் கேடயம் ஜனநாயகத்தில் வாக்குரிமை. இஸ்லாமியச் சட்டவியலின் படி(Fiqh), வாக்களிப்பது ஒரு சாட்சியம்(Shahadah) அளிப்பது போன்றதாகும். ஜனநாயகவாதி யாக முழக்கமிட்டு வருபவர்களிடமும், இளைய தலைமுறைகளை மயக்கும் மாய ஜாலக்காரர்களிடமும் கவனமாக இருக்க வேண்டிய நேரம் இது.

தீமைகளைத் தடுப்பதும் நன்மைகளைப் பரப்புவதும் இஸ்லாத்தின் கடமைகளில் மிக முக்கியமான கடமை. சட்டசபைகளிலும் நாடாளுமன்றங்களிலுமே சமூகத்திற்கான சட்ட விதிமுறைகள் இயற்றப்படுகின்றன. நன்மைகளை அங்கு நடைமுறைப்படுத்தவும், தீமையான சட்டங்களைத் தடுப்பதற்கும் தேவையான பிரதிநிதிகளுடன் நல்லவர்கள் களமிறங்குவது மிக மிக அவசியம். சிறுபான் மைச் சமுதாயத்தின் உரிமைகளைப் பாது காக்க, சமுதாய நலன் கருதி சிறந்த முடிவை எடுப்பது காலத்தின் கட்டாயம்.

நபி(ஸல்) அவர்கள் மக்காவில் இருந்த போதும் சரி, மதீனாவில் ஆட்சி அமைத்த போதும் சரி, சமூக ஒப்பந்தங்களுக்கு (ஹுதை பியா உடன்படிக்கை, மதீனா சாசனம்) மிகுந்த முக்கியத்துவம் அளித்ததைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மக்களாட்சி முறையில் வாழும் நாம், நாட்டின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, சமூக மேம்பாட்டிற்காக அரசியலில் விழிப்பு உணர்வோடு இருக்க வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயம். தேர்தல் அரசியல் என்பது வாக்களிப்பதோடு முடிந்து விடுவதல்ல. அது கல்வி, பொருளாதாரம், முன்னேற்றம், அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் நீண்ட காலப் பயணமாகும்.

நம் எதிர்கால முன்னேற்றத்திற்கு யார் முன்னுரிமை அளிப்பார்கள், நமது வாழ்வுரி மைக்கு யார் குரல் கொடுப்பார்கள், யார் துணை நிற்பார்கள் என்று பார்க்க வேண்டும். ஒவ்வொருவரும் விழிப்புடன் தேர்தலில் பங்கேற்பதும், தகுதியான ஆளுமைகளைத் தேர்வு செய்வதும் அவசியம். வாக்களிப்பது நம் உரிமை. தகுதியானவர்களைத் தேர்ந் தெடுப்பது நம் கடமை.

# நபிகள் நாயகம்(ஸல்) போதிக்கும்
# விலங்கு வளர்ப்பு



**அ.மரியம் ஷராஃபியா**
9ஆம் வகுப்பு,
இஸ்லாமியா மெட்ரிக்
மேல்நிலைப்பள்ளி,
சலாமத் நகர்,
கரும்புக்கடை,
கோயம்புத்தூர்

சென்னை பெரம்பூர் ஜமாலியா மேனிலைப்பள்ளி ஆண்டுதோறும் நடத்தும் அனைத்துப் பள்ளி நபிகள் நாயகம் கட்டுரைப் போட்டியில் 2025–2026 (52ஆவது) ஆண்டிற்கான போட்டியில் முஸ்லிம் மாணவர்களுக்கான பிரிவில் முதல் பரிசு பெற்ற கட்டுரை

அல்லாஹ் உலகத்தைப் படைப்பதற்கு முன் ஒரு ஏட்டைத் தயாரித்து அதில் உலகம் முடியும் நாள் வரை நடக்க இருக்கும் அனைத்து விஷயங்களையும் பதிவு செய்து வைத்துள்ளான். அதில் மனிதர்களைப் பற்றி மட்டும் பதிவு செய்யவில்லை. பறவைகள், விலங்குகள் குறித்தும் கூட அல்லாஹ் பதிவு செய்துள்ளான்.

'பூமியில் வாழும் எல்லாப் பிராணிகளும், தன் இரு சிறகுகளின் துணை கொண்டு பறந்து செல்லும் எல்லாப் பறவைகளும் உங்களைப் போன்ற உயிரினங்களாகவே இருக்கின்றன (என்பதைக் கவனியுங்கள்) நாம் அவர்களைப் பற்றி பதிவு செய்வதில் யாதொரு குறையையும் வைக்கவில்லை. பிறகு இவர்கள் அனைவரும் தம் இறைவனிடமே ஒன்று சேர்க்கப்படுவார்கள்' (திருக்குர்ஆன் 6:38)

அல்லாஹ் விலங்குகளுக்குக் கொடுத்துள்ள முக்கியத் துவத்தை இந்த வசனம் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

நபி(ஸல்) அவர்கள் விலங்குகளின் உரிமைகள் குறித்துக் கூறியுள்ளார்கள். ஆயிஷா(ரலி) அவர்கள் ஒரு முறை குதிரை மீது சவாரி செய்தார்கள். அக்குதிரை அவர்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்தியது. அதனால் அவர்கள் அதன் கடிவாளத்தைப் பிடித்து திரும்பத் திரும்ப இழுத்துக் கொண்டு இருந்தார்கள். அதைக் கண்ட நபி(ஸல்) அவர்கள் 'நீ அதனிடம் மென்மையாக நடந்து கொள்' என்றார்கள். (நூல்: முஸ்லிம் ஹதீஸ் எண்: 2597)

மனிதர்கள் விலங்குகளிடம் மென்மையாகவே நடந்து கொள்ள வேண்டும். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: '(முன்னொரு சமுதாயத்தைச் சேர்ந்த) பெண் ஒருத்தி ஒரு பூனை(க்கு துன்பம் தந்த) விஷயத்தில் வேதனைப்படுத்தப்பட்டாள். அந்தப் பூனையை, அது பசியால் துடித்துச் சாகும் வரை அவள் அடைத்து வைத்திருந்தாள். அதன் காரணத்தால் அவள் நரகத்தில் புகுந்தாள். அப்போது, 'நீ அதைக் கட்டி வைத்து அதற்குத் தீனி போடவுமில்லை. தண்ணீர் தரவுமில்லை. அது பூமியிலுள்ள புழு பூச்சிகளைத் தின்று (பிழைத்துக்) கொள்ளட்டும் என்று அதை அவிழ்த்து விடவுமில்லை' என்று அல்லாஹ் கூறினான்.

(அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி), நூல்: புகாரி)

பூனையை வீட்டில் வளர்ப்பது தவறு அல்ல. ஆனால் அதை நாம் பராமரிக்க வேண்டும். இல்லை என்றால் அதை அவிழ்த்து விட வேண்டும். அவை ஏதாவது பூச்சி, புழுக்களைத் தின்று வாழும். வீட்டில் வைத்து கொடுமைப்படுத்தக் கூடாது.

'நாயோ உருவப்படமோ உள்ள வீட்டில் (இறைவனின் கருணையைக் கொணரும்) வானவர்கள் நுழைய மாட்டார்கள்' (அறிவிப் பவர்: அபூதல்ஹா(ரலி) நூல்: புகாரி ஹதீஸ் எண்: 3322)

நாய் அது எவ்வளவு உயர்தரமானதாக இருந்தாலும் அது வீட்டினுள் அசுத்தம் செய் யும். குரைக்கும். அதன் எச்சிலினாலும், நாய்க்கடியினாலும் பாதிப்புகள் நேரும். துன்பங்களை நமக்கு நாமே விலை கொடுத்து வாங்கியது போலாகும்.

'எவர் நாய் வைத்திருக்கிறாரோ அவரது நற்செயலிருந்து ஒரு கீராத் அளவு குறைந்து விடுகிறது. விவசாயப் பண்ணையைப் பாது காக்கும், கால்நடைகளைப் பாதுகாக்கும் நாயைத் தவிர..' (அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரலி) நூல்: புகாரி )

பாதுகாப்புக்காக நாய் வளர்த்துக் கொள்ளலாம். ஆனால் அதையும் வீட்டிற்குள் அனுமதிக்கலாகாது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களில் ஒருவருடைய (தண்ணீர்) பாத்திரத்தில் நாய் கடித்து விடுமானால் அவர் அப்பாத்திரத்தை ஏழு முறை கழுவட்டும்' அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரலி) நூல்: புகாரி)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'விபச்சாரியான ஒரு பெண். ஒரு கிணற்றின் விளிம்பில் நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டிருந்த ஒரு நாயைக் கடந்து சென்றாள். அதைக் கண்ட அப்பெண் உடனே தன் காலுறையைக் கழற்றி (கிணற்று நீரை) இறைத்து அதற்குக் கொடுத்தாள். ஆகவே, அது பிழைத்துக் கொண்டது. அவள் ஓர் உயிருக்குக் காட்டிய இந்தக் கருணையின் காரணத்தால் அவளுக்கு (பாவ) மன்னிப்பு வழங்கப்படும்' (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: புகாரி)

ஒரு மனிதர் (ஒரு பாதையில்) நடந்து சென்று கொண்டிருந்த போது அவருக்குக் கடுமையான தாகம் ஏற்பட்டது. உடனே அவர் (அங்கிருந்த) ஒரு கிணற்றில் இறங்கி அதிலிருந்து (தண்ணீரை அள்ளிக்) குடித்தார். பிறகு (கிணற்றிலிருந்து) அவர் வெளியே வந்த போது நாய் ஒன்று தாகத்தால் தவித்து நாக்கைத் தொங்க விட்டபடி ஈர மண்ணை நக்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். அவர் தனக்கு ஏற்பட்டதைப் போன்ற அதே கடுமை யான தாகம் இந்த நாய்க்கும் ஏற்பட்டிருக் கின்றது என்று எண்ணிக் கொண்டார்.

உடனே (மீண்டும் கிணற்றில் இறங்கித் தண்ணீரைத்) தனது காலுறையில் நிரப்பி அதை வாயால் கவ்விக் கொண்டு, மேலே வந்து அந்த நாய்க்குப் புகட்டினார். அல்லாஹ் அவருடைய இந்த நற்செயலை ஏற்று அவரது



**அல்லாஹ்வின் தூதரே! கால்நடைகள் விஷயத்திலும் எங்களுக்கு நன்மை கிடைக்குமா? என்று கேட்டார்கள். 'ஆம்..! உயிருள்ள ஒவ்வொரு பிராணியின் விஷயத்திலும் நற்கூலி உண்டு' என்றார்கள்.**

பாவங்களை மன்னித்தான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதைச் செவியுற்ற நபித்தோழர்கள் அல்லாஹ்வின் தூதரே! கால்நடைகள் விஷயத்திலும் எங்களுக்கு நன்மை கிடைக்குமா? என்று கேட்டார்கள். 'ஆம்..! உயிருள்ள ஒவ்வொரு பிராணியின் விஷயத்திலும் நற்கூலி உண்டு' என்றார்கள். (அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரலி) நூல்: புகாரி)

விலங்குகளை இறைச்சிக்காக அறுக்கும் போது கூட ஒழுங்குகளை இஸ்லாம் பேணச் சொல்கின்றது. கூர்மையான கத்தியைப் பயன்படுத்தி, விலங்கின் கழுத்துப் பகுதியில் உள்ள இரத்தக் குழாய்களை விரைவாக அறுக்க வேண்டும், ஏனெனில் விரைவாக இரத்தம் வெளியேறுவதன் மூலம் விலங்குகளுக்கு ஏற்படும் வலி குறைகின்றது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நிச்சயமாக அல்லாஹ் எல்லா விஷயங்களையும் மிகவும் அழகிய முறையில் செய்ய வேண்டும் என விதித்துள்ளான். ஆகவே நீங்கள் அறுத்தால் அழகிய முறையில் அறுங்கள். எனவே உங்களில் அறுக்கும் ஒருவர் தனது கத்தியைக் கூர்மையாக்கிக் கொள்ளட்டும்' (அறிவிப்பவர்: ஷத்தாத் பின் அவ்ஸ் நூல்: முஸ்லிம்)

எந்த அல்லாஹ் இந்த உயிரினங்களைப் படைத்தவனோ அவனே அதை அறுத்து உண்ண நமக்கு அனுமதி அளித்துள்ளான். ஆனால் அறுக்கும் போது அல்லாஹ்வின் பெயர் கூற வேண்டும். ஏனெனில், இந்த உயிரைப் படைத்த நீ அனுமதி அளித்ததால் தான் நான் இதை அறுக்கின்றேன். நான் கொலை செய்யும் அளவுக்குக் கொடூரமானவன் அல்லன், என்று கூறுவது ஆகும்.

ஒவ்வொரு உயிரினங்களையும் அல்லாஹ் மனிதர்களுக்காகவே படைத்துள்ளான். 'அவன் கால்நடைகளையும் படைத்தான்! அவற்றில் உங்களுக்கு உடையும் இருக்கிறது; உணவும் இருக்கிறது; இன்னும் பல பயன்களும் இருக்கின்றன.' (திருக்குர்ஆன் 16:5)

'மேலும், மிகவும் சிரமப்பட்டே தவிர உங்களால் அடைய இயலாத இடங்களுக்கெல்லாம் அவை உங்கள் சுமைகளைச் சுமந்து செல்கின்றன. திண்ணமாக, உங்கள் அதிபதி அளவிலாப் பரிவும் கருணையும் உடையவனாயிருக்கின்றான்.' (திருக்குர்ஆன் 16:7)

அல்லாஹ் ஒவ்வொரு உயிரினத்தையும் நமக்காகவே படைத்துள்ளான். அந்த விலங்குகள் இறைவன் நமக்குக் கொடுத்துள்ள அடைக்கலம். அவற்றை இரக்கத்துடனும் நபி(ஸல்) அவர்கள் வழிகாட்டிய அடிப்படையிலும் பராமரிப்பது நமது கடமை.

ஒரு விலங்குக்குச் செய்யும் ஒரு செயல் மனிதனுக்குச் செய்யும் நல்ல செயல் போலவே ஆகும். அதே போல, ஒரு விலங்குக்குச் செய்யும் கொடுமை மனிதனுக்குச் செய்வது போல் ஆகும். எனவே நாம் விலங்குகள் தானே என்று அலட்சியமாக இருக்காமல் அவையும் உயிர்கள் என்று கருதுவோம். அவற்றுடன் நன்முறையில் நடந்து கொள்வோம்.

அரசியலற்ற இளைஞர்களை உருவாக்கி வரும்

# விஜயின் அரசியல் யாருக்குப் பயன்?

- முஜாஹித்



இந்தியாவிலேயே தமிழ்நாட்டின் சமூக அரசியல் எப்போதும் தனித்துவமாகவே விளங்கும். தமிழ்நாட்டின் தனித்துவத்திற்கும் வளர்ச்சிக்கும் மிக முக்கியக் காரணம் ஒரு நூற்றாண்டாக இம்மண்ணில் பரப்பப்பட்ட கொள்கை, சித்தாந்தம்தான். தமிழ்நாட்டு மக்களின் சிந்தனைத் தெளிவு எது சரியான கொள்கை என்பதை உணர வைத்தது.

குறிப்பிட்ட உயர் சமூகத்தினருக்கு மட்டுமே கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்ட அனைத்தும் கிடைக்கிறது மற்ற சமூகத்தினருக்கு எதுவும் கிடைப்பதில்லை என்கிற சிந்தனைதான் நீதிக்கட்சி தொடங்க அடித்தளமிட்டது. அந்த நீதிக்கட்சியின் நீட்சியாக திராவிட இயக்கமும் அதனையே வலியுறுத்தி எல்லோருக்கும் எல்லாம் கிடைப்பதுதான் சமூக நீதி என்கிற சிந்தனையை மக்களுக்குள் விதைத்தது.

அது எளிதாக நடைபெறவில்லை. நீதிக்கட்சித் தலைவர்களும் பின்னாளில் திராவிட இயக்கத்தினரும் மேடைதோறும் பேசியும், எழுதியும் தமிழ்நாட்டு மக்களுக்குக் கொள்கை அறிவையும், அரசியல் தெளிவையும் புகட்டினர். உலக அரசியல் தொடங்கி உள்ளூர் அரசியல் வரை தமிழ்நாட்டு மக்களுக்குக் கொண்டு சேர்த்தனர். மாநில சுயாட்சி, மொழி உரிமை, சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றைப் படிக்காத பாமர மக்களுக்கும் புரியும் வகையில் எடுத்துரைத்தனர்.

கொள்கை சிந்தாந்த புரிதலை விதைத்ததன் விளைவாகத் தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றமே ஏற்பட்டது. அதுவும் இந்தியாவிலேயே ஒரு மாநிலக் கட்சி தொடங்கி 18 ஆண்டுகளிலேயே இந்தியாவையே ஆண்டு கொண்டிருந்த கட்சியைத் தோல்வியடையச் செய்து ஆட்சியில் அமர்ந்தது. அந்தத் தோல்வி ஏதோ ஒரு தேர்தலில் நடந்த தோல்வி அல்ல, மீண்டும் அந்த தேசியக் கட்சி தமிழ்நாட்டில் ஆளவே முடியாத நிலை ஏற்படும் அளவிற்கான தோல்வியை திமுக ஏற்படுத்தியது.

அடுத்தடுத்து நடந்த தேர்தல்களிலும் மீண்டும் மீண்டும் திராவிடக் கட்சிகளே தமிழ்நாட்டை ஆட்சி செய்தன. கொள்கை வழி வளர்ச்சியையும் திராவிடக் கட்சிகள் தந்தன, இன்றும் தந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைப் பலமிக்க தன் ஆக்டோபஸ் கைகளால் அபகரித்த பாஜகவால் இன்னும் தமிழ்நாட்டிற்குள் காலூன்ற முடியவில்லை.






தமிழ்நாட்டில் விரவி உள்ள திராவிடக் கொள்கை, அதனால் கிடைத்த கல்வி, வேலைவாய்ப்பு இன்னும் தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது. திராவிடக் கொள்கையையும் அது சார்ந்த கட்சிகளையும் வீழ்த்த வேண்டும் என்கிற நோக்கத்தில் பல கட்சிகள் அவ்வப்போது தோன்றி மறைவது உண்டு. அவர்களால் தாங்கள் நினைத்ததைச் சாதிக்க முடியாததற்குக் காரணம் கொள்கை புரிதலோடு அரசியல்மயப்பட்டுள்ள தமிழ்நாட்டு மக்கள் தான்.

தமிழ்நாட்டு மக்களை அரசியலற்றவர்களாக மாற்றி விட்டால் தமிழ்நாட்டிற்குள் நுழைந்து விடலாம் என்பதுதான் ஃபாசிஸவாதிகளின் எண்ணம். ஆனால் அது அவ்வளவு சுலபமல்ல என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும். இருந்தபோதும் அதற்கான வாய்ப்புகளை அவர்கள் ஆராய்ந்து கொண்டே தான் இருந்தார்கள். இந்தச் சூழலில் நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்கிற கட்சியைத் தொடங்கினார்.

கட்சி தொடங்கப்பட்ட பின் வைத்த முதல் மாநாட்டில் அவர் பெரியார், அம்பேத்கர், காமராஜர், வேலுநாச்சியார், அஞ்சலை அம்மாள் ஆகியோரைக் கொள்கைத் தலைவர்களாக அறிவித்தார். ஆனால் அவர் அறிவித்த தலைவர்கள் குறித்தோ அவர்களின் கொள்கை குறித்தோ எதுவும் பேசவில்லை. போகப் போகப் பேசுவார் எனப் பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

முதல் மாநாட்டில் ஓரளவிற்குப் பேசிய பாஜக எதிர்ப்பும் அடுத்தடுத்து நடந்த மாநாடுகளிலும், மக்கள் சந்திப்புக் கூட்டங்களிலும் அறவே இல்லாமல் போனது. விஜயும் சரி, அந்தக் கட்சியின் நிர்வாகிகளும் சரி தங்கள் தொண்டர்களுக்கு எந்தவித கொள்கை அறிவையோ, அரசியல் அறிவையோ வழங்கவில்லை. விஜய் பேசும் அனைத்துக் கூட்டங்களிலும் உணர்வுகளைத் தூண்டும் வகையில் மட்டுமே சினிமா பாணியில் உரைகளை வழங்கினார்.

கொள்கையற்ற, அரசியலற்ற அவருடைய அரசியலால் அவருக்குப் பின்னால் திரண்டுள்ள கூட்டம் அரசியலற்றே உருவாகி நிற்கின்றனர். கட்சி தொடங்கிய தொடக்கத்தில்தான் தங்கள் கட்சியின் தொண்டர்களுக்கு அரசியல் பயிற்றுவிப்பார்கள்.



***விஜயும் சரி, அந்தக் கட்சியின் நிர்வாகிகளும் சரி தங்கள் தொண்டர்களுக்கு எந்தவித கொள்கை அறிவையோ, அரசியல் அறிவையோ வழங்கவில்லை. விஜய் பேசும் அனைத்துக் கூட்டங்களிலும் உணர்வுகளைத் தூண்டும் வகையில் மட்டுமே சினிமா பாணியில் உரைகளை வழங்கினார்.***

ஆனால் தவெகவில் அப்படி எந்தப் பயிற்சியும் வழங்கப்படுவதில்லை.

மாறாக விஜயை முன்னிருத்தி தனிநபர் துதிபாடலுக்கான வாசல்களே அங்கு திறந்து உள்ளன. அதனால் தான் விஜய் வெளியே வந்தாலே அவரைப் பார்க்க வேண்டும் என்கிற ஒற்றைக் குறிக்கோளோடு அவர் பின்னால் இளைஞர்களும் இளம்பெண்களும் துரத்திச் செல்கின்றனர். கடந்த சில தினங்களுக்கு முன்பு திருச்சி வந்து அவர் புறப்பட்டபோது அவர் சென்ற விமானத்தைப் பார்த்து விசில் அடித்து ஆர்ப்பரித்துள்ளனர். இதுதான் மிகவும் ஆபத்தான போக்கு.

இப்படி அரசியலற்ற இளைஞர்கள் உருவாவது ஏதோ அந்தக் கட்சிக்குத் தான்



பாதிப்பு என்றால் நிச்சயமாக இல்லை அது தமிழ்நாட்டிற்கே பேராபத்து. திராவிட இயக்கங்களால் அரசியல் புரிதலோடு உருவாக்கப்பட்ட மக்களால் தான் இன்று தமிழ்நாடு தனித்துவ வளர்ச்சி பெற்று முன்மாதிரி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.

யாரை எதிர்க்க வேண்டும் யாரை ஆதரிக்க வேண்டும் என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அரசியலற்ற இளைஞர்கள் உருவானால் அவர்கள் எதிர்காலத்தில் யார் நமக்கு ஆதரவானவர்கள் யார் நமக்கு எதிரானவர்கள் என்கிற புரிதலற்று இருப்பார்கள். தன்னுடைய தலைவன் யாரைச் சொல்கிறாரோ அவர்களைக் கண்மூடித்தனமாக ஆதரிப்பார்கள்.

அரசியலற்ற கூட்டத்தால் லாபமடையப் போவது விஜயோ அவருடைய கட்சியோ அல்ல, அவர்களைப் பயன்படுத்தி பாஜகவே பலனடையும். அதனால் தான் விஜய் பாஜகவிற்கு மறைமுகமாக உதவுவதாகத் தொடர்ந்து விமர்சனம் எழுகின்றன.

இன்றைய Gen Z தலைமுறையினர் சமூக வலைதளங்களின் பிடியில் சிக்கி அதில் வருவதுதான் உண்மை என நம்பி இருக்கிறார்கள். அதைத் தாண்டி பெரிதாக அவர்கள் அரசியல் குறித்து எதுவும் சிந்திப்பதில்லை. அவர்களிடம் சென்று சேர்வதில் முற்போக்கு இயக்கங்களிடம் போதாமை உள்ளது. இன்றைய தலைமுறையினரிடம் அவர்கள் மொழியில் அவர்கள் வழியில்

***விஜயின் அரசியலற்ற அரசியலை மக்கள் புறக்கணிக்க வேண்டும். அப்போதுதான் அடுத்த தலைமுறையையும் தமிழ்நாட்டின் எதிர்காலத்தையும் காக்க முடியும்.***

பேசி கொள்கை அறிவைப் புகுத்த வேண்டும். அதை மிக விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

அது ஒரு புறம் இருக்க, இன்றைய உடனடித் தேவையாக விஜயின் அரசியலற்ற அரசியலை மக்கள் புறக்கணிக்க வேண்டும். அப்போது தான் அடுத்த தலைமுறையையும் தமிழ்நாட்டின் எதிர்காலத்தையும் காக்க முடியும்.

விஜயை எதிர்ப்பது ஒரு தனி நபரையோ ஒரு தனிப்பட்ட கட்சியையோ எதிர்ப்பது அல்ல, தமிழ்நாட்டின் அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்ல வழிவகுக்கும் தமிழ்நாட்டிற்கு விரோதமான நடைமுறையை எதிர்ப்பதே ஆகும்.

# மனநிறைவுடன் வாழ..!

- அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது


நாங்கள் மற்றவர்களைவிட அதிக துன்பத்திலும் துயரத்திலும் இருக்கின்றோம்; அதிக சோதனைகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றோம் என நினைப்பவர்கள் பலர். ஆனால் இந்தப் பார்வை உண்மையல்ல. உலக வாழ்க்கையில் விதிவிலக்குகள் இல்லாமல் ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்வில் ஏதோ ஒரு வகையான வேதனை இருக்கும்; சோதனை இருக்கும். வித்தியாசம் இருப்பது, அல்லாஹ்வின் தீர்ப்பையும் விதியையும் நாம் எவ்வளவு திருப்தியுடன் ஏற்றுக்கொள்கிறோம் என்பதில்தான்.

ஒருவரிடம் உடல்நலம் இருக்கும்; செல்வம் இருக்காது. ஒருவரிடம் செல்வம் இருக்கும்; பிள்ளைகள் இருக்கமாட்டார்கள். உடல்நலம், செல்வம், பிள்ளைகள் அனைத்தும் உள்ளவருக்கும் பிள்ளைகளிடம் நற்குணங்கள் இல்லாமல் போகலாம். நல்ல பிள்ளைகளைப் பெற்றவர் தமது சிறு பிராயத்தில் பெற்றோரின் அரவணைப்பில்லாமல் அநாதையாக வளர்ந்திருக்கலாம். பெற்றோரின் அன்பில் வளர்ந்தவருக்குத் திருப்தியான, அமைதியான தாம்பத்திய வாழ்க்கை கிடைக்காமல் போகலாம். இந்த உலகில் எதுவும் முழுமையானது அல்ல. மன நிறைவும் திருப்தியும் இருந்தால்தான் மகிழ்ச்சி முழுமை பெறுகிறது.

## மன நிறைவோடும் மகிழ்வாகவும் வாழ என்ன வழி?

இருப்பதைக் கொண்டு திருப்தி கொள்ளும் மனோநிலையை வளர்த்துக் கொள்வதே அதற்கான வழி. உண்மையில் அல்லாஹ் நம் ஒவ்வொருவருக்கும் நிறையவே தந்திருக்கின்றான். அவன் நமக்கு எதையெல்லாம் தரவில்லை என்று எண்ணி கவலைப்படுவதைவிட, எதையெல்லாம் தந்திருக்கின்றான் என்பதை எண்ணி அவனுக்கு நன்றி செலுத்தி வாழும் மனப்பான்மையே நிறைவான வாழ்க்கைக்கான சிறந்த வழி.

போதுமென்ற மனப்பான்மை உள்ளவர், இருப்பதை வைத்து நிறைவாக வாழக் கற்றுக்கொண்டவர் உண்மையான மகிழ்ச்சியான வாழ்க்கையைப் பெறுகிறார். ஒருவர் தன்னிடமுள்ளதைக் கொண்டு திருப்தி அடைந்து, தனக்குக் கீழுள்ளவர்களைப் பார்த்து ஆறுதல் அடைகின்றபோது, உள்ளத்தில் அமைதி குடியேறும்; மனம் நிறைவு பெறும்.



இந்த நடைமுறைக்கேற்ற அற்புதமான உளவியல் வழிகாட்டலை நபி(ஸல்) அவர்கள் நமக்குத் தந்துள்ளார்கள்: ‘செல்வத்திலும் தோற்றத்திலும் தம்மை விட மேலான ஒரு வரை உங்களில் ஒருவர் கண்டால், உடனே (அவற்றில்) தம்மை விடக் கீழானவர்களை அவர் பார்க்கட்டும்’ (ஸஹீஹுல் புகாரி)

‘உங்களை விடக் கீழுள்ளவர்களைப் பாருங் கள்; உங்களை விட உயர்ந்தவர்களைப் பார்க்காதீர்கள். அல்லாஹ் உங்கள் மீது பொழிந் துள்ள நிஃமத்தை நீங்கள் குறைத்து மதிப் பிடாமல் இருப்பதற்கு இதுவே மிகப் பொருத்த மான வழியாகும்’ (ஸுனன் இப்னு மாஜா)

அல்லாஹ் செல்வத்தையும் ஏனைய வளங் களையும், அருட்கொடைகளையும் அவனது ஞானத்தின் அடிப்படையில் மனிதர்களுக்கு மத்தியில் வித்தியாசமாகப் பகிர்ந்தளிக்கின் றான். அந்த வகையில், ‘எனக்கென்று அவன் நிர்ணயித்ததையே நான் பெறுவேன்’ என்ற உண்மையைப் புரிந்து வாழ வேண்டும்.

‘ஒருவருக்கு தன் வாழ்விடத்தில் பாது காப்பும், உடலில் ஆரோக்கியமும், அன்றாடம் தேவையான உணவும் இருக்கும் நிலையில் ஒரு காலைப் பொழுதை அவர் சந்தித்தால், அவர் முழு உலகையும் சொந்தமாகப் பெற்ற வரைப் போலாவார்’ (திர்மிதி)

‘வாழ்க்கை வசதிகள் அதிகமாக இருப்பது செல்வமன்று; மாறாக, போதுமென்ற மனமே உண்மையான செல்வமாகும்’ (ஸஹீஹ் முஸ்லிம்)

மேற்கண்ட நபி மொழிகளை நாம் அடிக் கடி, அவ்வப்போது நினைவுக்குக் கொண்டு வருவது வாழ்க்கைத் தொடர்பில் நேர்மறை யான பார்வையுடன் நாம் பயணிக்கத் துணை புரியும். ‘யா அல்லாஹ்! உனது தீர்ப்பில் திருப்தியை எங்களுக்கு அருள்வாயாக. சோதனைகளின் போது பொறுமையை வழங் குவாயாக. உன்னைச் சந்திக்கும் நாளில் வெற்றியையும் எங்களுக்கு அளிப்பாயாக!


HIJAZ
LEATHERS PVT. LTD.,
Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

# இந்திய முத்தம்

– வி.எஸ். முஹம்மத் அமீன்

இன்னும் சில மணித்துளிகளில் உனைஸாவை விட்டு விடைபெறப் போகிறேன். அடுத்த நாளில் இந்திய மண்ணை மிதிக்கப் போகிறேன். அடுத்த நாள் என் சொந்த ஊரில், தெருவில், வீட்டில் கால் பதிக்கப் போகிறேன். இன்னும் இரண்டு ஆண்டுகளில்.. இன்னும் ஒன்னரை ஆண்டுகளில்.. இன்னும் ஏழு மாதங்களில் என்று நகம் நகமாய் நகர்த்தி இன்றைக்கு அந்த நாள்களை மணிக்கணக்கிட்டு நெருங்கிக் கொண்டிருக்கின்றேன்.

பிழைப்புத்தேடி வெளிநாட்டு வாழ்க்கைக்கு வாக்கப்பட்டு விட்டால் உள்ளத்தை ஊரில் வைத்துவிட்டு வெற்றுடம்பைச் சுமந்து பாலைவெளிகளில் இப்படித்தான் காலம் தள்ள வேண்டியிருக்கின்றது. எதற்கெடுத்தாலும் கட் அண்ட் ரைட் பேசும் கஃபிலில் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தத்தில் ஒருநாள் கூட முந்திவிடாதபடி இரண்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்தால்தான் லீவு அடிக்கக் கொடுப்பார். இந்த முறை பேரதிசயம் நடந்திருக்கிறது. ஊரிலிருந்து வந்து ஓராண்டு எட்டு மாதங்கள் முடியும் முன்பே லீவு அடித்துக் கொடுத்திருக்கின்றார். ஏன் இந்த மாற்றம்? புரியவில்லை. கேள்வி கேட்கும் இடத்தில் நான் இல்லை. லீவு கிடைத்ததை விடவும் பெரும் மகிழ்ச்சி வேறென்ன இருக்க முடியும்.

'ரெண்டு வருஷம் தெவயலியே.. ஏன் எதுனாச்சும் பிரச்னையா?' என்றுதான் வாப்பா கேட்டார். மனைவியால் வெளிப்படுத்த முடியாத பெருமகிழ்வை பிள்ளைகள் கொட்டித் தீர்க்கின்றார்கள். 'ஹையா... எங்க வாப்பா அடுத்த வாரம் வருதே..!' என்று சின்னவள் பார்க்கின்றவர்களிடமெல்லாம் சொல்கிறாளாம். 'என்ன வேண்டும்?' என்று கேட்டால் 'நீங்க வந்தாலே போதும் வாப்பா' என்கிறாள் முத்தவள்.

யார் யாருக்கு என்ன வாங்க வேண்டுமென யோசித்து யோசித்து எழுதி புரைதாவுக்குப் போய் கடைகடையாய் ஏறி இறங்கி பொருள்களை வாங்கியாகிவிட்டது. முன்பெல்லாம் கோடாரித் தைலம், பெல்ட், டேப் ரிக்கார்டர், பேண்ட் சட்டைத் துணி, கால்குலேட்டர் என்று வாங்கினால் போதும். இப்போது ஐபோன் தொடங்கி ஒவ்வொருவருக்கும் பொருள்கள் வாங்குவதற்குள் இரண்டு மாதச் சம்பளமும் முழுசாய்த் தீர்ந்து போய்விடுகிறது. சின்னாப்பா பையனுக்கு டேப்லெட் வாங்கணும். தம்பி பொண்ணுக்கு பேசும் பொம்மை, மச்சான் குழந்தைகளுக்கு கிச்சன் செட் ரியாத்தில் போய்தான் வாங்க வேண்டும்.

உனைஸாவிலிருந்து ரியாத் 350 கிலோ மீட்டர் தூரம். இங்குள்ள அரசுப் பேருந்துபோல் அங்குள்ள SAPTCOவில் சென்றால் ஐந்துமணி நேரம். காரில் என்றால் மூன்றுமணி நேரத்தில் பறந்துவிடலாம். காருக்கு எப்படியும் நூற்றி இருபது ரியால் வேண்டும். SAPTCOவில் அறுபது ரியால்களுடன் முடிந்துவிடும். நேற்றே டிக்கட் முன்பதிவு செய்தாயிற்று. மாலை ஐந்து மணிக்கு பஸ்ஸ்டாண்டில் இருந்து புறப்படும். இங்கிருந்து மூன்றரைக்குக் கிளம்பினால் சரியாக வரும். இன்னும் இரண்டு மணி நேரம்தான். சாப்பாடு உள்ளே செல்லவில்லை. ஊர் செல்லும் படபடப்பு இரண்டு நாள்களாகவே தொற்றிக் கொண்டது. வழி அனுப்புவதற்கு நண்பர்கள் இன்னும் கொஞ்சம் நேரத்தில் வந்துவிடுவார்கள்.

அட்டைப்பெட்டிக்குள் எல்லாவற்றையும் எடுத்துவைத்தாலும் ஏதாவது விடுபட்டுப் போகலாம். ஓடிக்கொண்டிருந்த சிந்தனைகளை கஃபிலுடைய அலைப்பேசி அழைப்பு சிதறடித்தது. இந்த நேரத்தில் எதற்காக இந்த மனுஷன் போன் செய்யணும். அலைப்பேசியுடன் இதயமும் சேர்ந்து அதிர்ந்து இரைந்தது.

‘அஸ்ஸலாமு அலைக்கும்’

‘வ அலைக்கும் ஸலாம்’

‘நலம்தானே..!’

‘அல்ஹம்துலில்லாஹ்..!’

‘எத்தனை மணிக்கு ரியாத்திலிருந்து ஃப்ளைட்?’

‘நாளை இரவு 12 மணிக்கு..!’

‘இன்றைக்கே ரியாத் போவதாய்ச் சொன்னாயே..!’

‘ஆமா..! ரியாத்தில எங்க மாமா இருக்காங்க.. அங்கபோய் இருந்துட்டு நாளை கிளம்பணும்..!’

‘நல்லது..! ரியாத் எப்போ கிளம்பற..?’

‘இதோ.. கிளம்பிட்டேன்.. 5 மணிக்கு SAPTCOவில் புக் பண்ணிருக்கேன்..’

‘அந்த டிக்கட்ட கேன்சல் பண்ணிடு..! நான் வந்து பேசிக்கறேன். ம்ம்... இல்ல அஸர் தொழுகைக்கு என் வீட்டுப் பக்கத்திலுள்ள பள்ளிவாசலுக்கு தொழ வா.. பேசலாம்.’

- சொல்லிவிட்டு அழைப்பைத் துண்டித்து விட்டார். வானம் இடிந்து தலையில் விழுந்ததுபோல் அதிர்ந்தேன். குப்பென வியர்த்தது. என்னாச்சு..! ஏன் திடீர்னு பயணத்தை ரத்து செய்யச் சொல்கிறார்? இந்த நாட்டில் நான் ஓர் அகதிபோலத்தான். எனது எல்லாப் பிடியும் முதலாளியின் கைகளில்தான். இவர்கள் இப்படித்தான்..! திடீர் திடீரென எதையாவது நினைப்பது. நினைத்ததை எந்தவித யோசனையுமில்லாமல் உடனே செய்வது..!

மாமாவுக்குப் போன் செய்து விஷயத்தைச் சொன்னபோது திட்டித் தீர்த்துவிட்டார். என்ன செய்வதென ஒருவருக்கும் புரியவில்லை. நண்பர்கள் ஆறுதல் சொல்ல வந்துகொண்டிருக்கின்றார்கள். கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அழுகை முட்டிக் கொண்டு வந்தது. கோபப்படவோ, அழவோ முடியாது. அதுதான் வளைகுடா வாழ்க்கை.

‘வாப்பா வரலியாம்!’ சின்னவளின் ஆசை தூள்தூளாய்ப் போகாதா? பெரியவள் எப்படிச் சமாளிப்பாள். மனைவி கட்டிய ஓராயிரம் கனவுக் கோட்டைகளை ஒரே நொடியில் இப்படியா தகர்தெறிவது. நம்பியிருக்கக் கூடாது. இரண்டாண்டு முடிவதற்கு முன்பே லீவு தருகிறாரென்றால் அப்போதே சுதாரித்திருக்க வேண்டும். எதனால் இரத்து செய்யச் சொல்கிறார். யார் என்ன சொல்லித் தொலைத்துவிட்டார்கள். வார்த்தைகள் வெடித்துக் கிளம்பின. அலைப்பேசி அழைப்புகள் தொடர்ந்து வந்துகொண்டிருந்தன. ஒவ்வொருவரிடமும் விளக்கம் சொல்லி முடியவில்லை. சிலர் அதிகமாகவே பயமுறுத்தத் தொடங்கிவிட்டார்கள். ஊருக்குக் கொண்டு செல்வதற்காகக் கட்டிய பெட்டிகள் என்னைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்தன.

ஊருக்கு தகவல் சொல்ல வேண்டாம். பாவம் அவர்கள் ஏமாந்து போவார்கள்.




இந்த வீணாப்போனவன் என்ன சொல்கிறான் என்று பார்த்துவிட்டு இரவு பேசி சமாதானம் செய்யலாம். சந்திக்க வந்த தோழர்கள் கிளம்பியதும் வெறுமை இன்னும் அதிகமானது. அஸர் தொழுகைக்கான அழைப்பு வந்ததும் உளூச் செய்துவிட்டு பள்ளிக்கு நடைபோட்டேன்.

தொழுகை முடிந்து காத்திருந்தேன். ஆபரேஷன் தியேட்டருக்கு வெளியே காத்திருக்கும் அதே துடிப்புடனான காத்திருத்தல். தேர்வு முடிவுகளைத் தேடும் இறுதி நேரத்திற்கான படபடப்பு. கஃபீல்

வேறு யாருடனோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார். தீயாய் வெந்தது. அருகில் வந்தார். தோள் மீது கைபோட்டு நலம் விசாரித்தார். நலவிசாரிப்புக்கான நேரமா இது? மீண்டும் அப்போது கேட்டதையே கேட்டார்.

'ஒன்னுமில்ல.. ஒரு ஏழு மணியப்போல ரெடியா இரு..! நான் என்னோட கார்லேயே உன்னை ரியாத்தில் விட்டுடுறேன். ரியாத்ல ஒரு சின்ன வேலை இருக்கு. நாளை போக வேண்டியது. உனக்காக இன்னிக்கே போறோம்.'

பனித்துளியாய் கரைந்தோடியது பயம். ப்பூ.. இதுதானா..! இவர்கள் இப்படித்தான். இதை அப்பவே சொல்லியிருக்க வேண்டியதுதானே..!

'வேற ஏதாச்சும் உனக்கு வேணுமா..!?' என்று அவர் கேட்டபோது கண் கலங்கியது. 'இல்லை' எனத் தலையாட்டி நன்றி சொன்னேன். ச்சே என்ன மனிதன் நான். இந்த இரண்டு மணி நேரத்தில் இவரை என்னவெல்லாம் பேசிவிட்டேன். வந்திருந்த நண்பர்களிடமெல்லாம் இவருடைய மரியாதையைச் சிதைத்துவிட்டேன். அவரை மட்டுமா? இந்த சவூதிகளே இப்படித்தான் என்று அவருடைய நாடு, வீடு எல்லாவற்றையும் இந்தக் குற்றத்தில் இணைத்துக் கொண்டேன். மீண்டும் எல்லாரிடமும் இந்த விளக்கத்தைச் சொல்ல முடியுமா? தெரியவில்லை. மாமாவுக்கு போன் செய்தபோது அவர் எடுக்கவில்லை. அழைப்பார். பேசிக்கொள்ளலாம்.

சவூதிகள் கார் ஓட்டுவதே தனி அழகுதான். ஒருகையில் சாண்ட்விச், டேஷ் போர்டில் டீ, அலைப்பேசியில் ஓயாத பேச்சு, தலையில் அணிந்திருக்கும் துணியை நிமிடத்திற்கு குறைந்தது ஐந்து முறையாவது சரிசெய்வது இத்தனையும் செய்துகொண்டே மணிக்கு 140 கிலோமீட்டர் வேகத்தில் லாவகமாக கார் ஓட்டுவார்கள். பள்ளிப்பருவத்திலேயே ஸ்டீரியங் பிடித்துப் பழகியவர்கள். அங்குள்ள சாலையும், வாகனமும் அந்த வேகத்திற்கு ஏற்றவை. முதலாளி கார் ஓட்ட ஒரு வேலைக்காரனாய் அவர் அருகில் அமர்ந்திருக்கின்றேன். என்னை வழியனுப்புவதற்காக ஒருநாள் முன்பே கிளம்பியிருக்கின்றார். நிறையப் பேசிக் கொண்டே வந்தார். விசயத்திற்கு வந்துவிட்டார்.

'உனக்கு ஏன் ரெண்டு வருஷம் முடியுறதுக்கு முன்பே லீவு தர்றேன் தெரியுமா?' இது நான் எதிர்பாராத கேள்வி. அல்லது நான் அவரிடம் கேட்டிருக்க வேண்டிய கேள்வி. என்னிடம் பதில் இல்லை.

'இங்கு இப்போ யார் மன்னர் தெரியுமா?' என்றார். இது தொடர்பில்லாத கேள்வி. ஆனாலும் ஏதோ ஒன்று இருக்கிறது. மன்னரின் பெயரைச் சொன்னேன். அதற்கு முன்பு இங்கு மன்னராக இருந்தவர் யார் தெரியுமா? என்ற கேள்விக்கு கொஞ்சமாய் யோசித்தேன்.

'ரொம்பவெல்லாம் யோசிக்க வேண்டாம். இங்கு பெயர் முக்கியமில்லை. காலமெல்லாம் மன்னர் அவருடைய தந்தை, அவருடைய குடும்பம்தான் இங்கு ஆட்சி புரிகின்றார்கள். இனி வரக்கூடியவர்களும் இவர்களின் குடும்பத்திலிருந்தே வருபவர்கள்' என்று சொல்லிக் கொண்டே என்ன நினைத்தாரோ தெரியவில்லை.

'நான் உன்னிடம் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் அமானிதம். இந்த காருக்குள்ளேயே இந்த உரையாடல் முடிந்துவிடவேண்டும். இறைவன்மீது ஆணையாக இது அமானிதம்' என்றார்.

'உங்கள் நம்பிக்கையை நான் காப்பாற்றுவேன். சொல்லுங்கள்' என்று சொன்னாலும் அவர் சொல்லும் விசயங்கள் ஒரு காருக்குள் புதைந்துபோகின்ற செய்தி அல்ல. உலகம் முழுவதும் சென்று சேர வேண்டிய செய்தி.

'இங்குமட்டுமல்ல, எகிப்து, துனீசியா, லிபியாவில் நாற்பது ஐம்பது ஆண்டுகள் எதேச்சதிகார ஆட்சிதான் இருந்தது. அதை எதிர்த்த மக்கள் புரட்சிதான் அரபு வசந்தம். மக்கள் புரட்சி அங்குள்ள ஆட்சியாளர்களைத் தூக்கி வீசியது. இங்கு அந்த வசந்தம் வருவதற்குள் அடக்கப்பட்டது'

முதலாளி இங்குள்ள மிக முக்கியமான ஆளுமை. அவரை இவ்வளவு நெருக்கமாக நான் பார்த்து உரையாடுவது அதுவும் இந்த

ஆழமான கருப்பொருளில் உரையாடுவது இதுவே முதல் முறை. அவர் ஏதோ ஒன்றை என்னிடம் சொல்ல விரும்புகிறார்.

'இந்த மன்னரை எதிர்த்து நாங்கள் எதுவும் செய்துவிட முடியாது. இவர்களை நாங்கள் தேர்ந்தெடுக்கவும் முடியாது. அதற் காகத்தான் நீண்ட காலமாய் உயிரைக் கொடுத்து பல நாடுகளில் மக்கள் போராடி னார்கள். அரசு அந்த சிந்தனையில் உள்ள வர்களைத் தேடியெடுத்து சிறைப்படுத் தியது.'

காரின் வேகம் குறைந்தது. இங்குள்ள போக்குவரத்து வசதிகளில் மிக முக்கிய மானது சாஸ்கோ எனும் ஓய்விடங்கள். இதுதவிர ஒவ்வொரு பெட்ரோல் நிலையங் களிலும் கடைகள், பள்ளிவாசல் அதனுடன் இணைந்த கழிப்பறைகள் இருக்கும். குறைந்தது பத்து பதினைந்து வண்டிகள் ஒவ்வொரு பெட்ரோல் நிலையங்களிலும் இளைப்பாறிக் கொண்டிருக்கும். ஒரு பெட்ரோல் நிலையத்திற்குள் வண்டியை நிறுத்திவிட்டு எனக்கும் அவருக்குமாக பால் கலக்காத சுலைமானியும், சாண்ட்விச்சு டனும் வந்தார்.

காருக்குள் இருந்த மனிதரா இவர். எது இவரின் இயல்பு? இங்கு வருபவர்களிடம் கைகுலுக்கி கன்னத்தோடு கன்னம் வைத்து முத்தமிட்டு பேசிச் சிரிக்கின்றார். ஆனால் அவருக்குள் ஒரு விடுதலைக்கான ஏக்க நெருப்பு அணையாமல் எரிந்து கொண் டிருக்கிறது.

மீண்டும் பயணம் தொடங்கியது. ஆனாலும் அவர் விட்ட இடத்திலிருந்து உரையாடலைத் தொடங்கவில்லை. கடை வியாபாரம் குறித்து, என் வீடு, எதிர்காலம், இந்தியாவைக் குறித்து பேசிக் கொண்டு வந்தார். என் விடுமுறை குறித்து கேள்வி எழுப்பி இந்த நாடுகுறித்த கவலையைச் சொன்னவர் பாதியிலேயே நிறுத்திவிட்டார் ஏன்? நான் சரியான முறையில் அவருடைய உணர்வோட்டத்துடன் இணைந்து கொள்ள வில்லையா?

நாமே கேட்பது அவ்வளவு நன்றாகவா இருக்கும். கேட்கலாமா? வேண்டாமா? எனும் மனப்போராட்டத்துடன் அவருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். சட்டென நான் எதிர்பாரா ஒரு சூழலில் அந்த உரை யாடலுக்குத் திரும்பினார்.

'ஜனநாயகம் ஓர் அருமையான தத்துவம் தெரியுமா சகோதரனே..! 'என்று சொல்லி விட்டு பேரதிர்சியாய் ஒரு செயலைச் செய்தார். உன் கையை நீட்டு என்றார். நீட்டினேன். இறுகப் பற்றிக் கொண்டார். கண்களில் வைத்து ஒற்றினார். ஆட்காட்டி விரலில் முத்தமிட்டார். உடலுக்குள் உயிர் பாய்ந்தது. ஜில்லென்றாகிவிட்டது. உறைந்து போய் நின்றேன்.

'என்ன.. என்ன இது..! ஷேக்..!' என்றேன்.

'நான் இதுவரை பேசியது உனக்குப் புரியவில்லையா?' என்று கேட்டு ஒரு ஏக்கப் பெருமூச்சுடன் பதிலளித்தார். 'நீ இந்தியன். உன் நாடு ஜனநாயக நாடு. உனக்கு வாக்களிக்கவும், ஆட்சியாளனை எதிர்த்து விரல் நீட்டி கேள்வி கேட்கவும் உன் நாடு உனக்கு உரிமை வழங்கியுள்ளது. என் வாழ்நாளில் நான் ஒருமுறைகூட வாக் களித்தது இல்லை. அதற்கான வாய்ப்பு எனக்கில்லை. உன் தமிழ்நாட்டில் தேர்தல் எனச் சொன்னாய். அதற்காகத்தான் நான்கு மாதங்களுக்கு முன்பே உனக்கு விடு முறை தந்துள்ளேன். அதற்காக உன்னை வழியனுப்ப நானே ரியாத் வருகிறேன். வாக்களிக்கும் உன் விரல்களுக்கு நான் ஜன நாயகத்திற்கான முத்தத்தைத் தந்தேன். அது நான் இந்தியாவிற்குத் தந்த முத்தம்.' இந்த வார்த்தைகளை அவர் சொல்லும் போது மிகுந்த உணர்ச்சிப் பெருக்குடன் இருந்தார். அவரை ஆரத் தழுவ வேண்டும் போல் இருந்தது.

டாக்ஸி ஸ்டாண்டில் என்னை இறக்கி விட்டு வட்டமடித்து வண்டி கிளம்பியது. சாலையின் அந்தப் பகுதியிலிருந்து காரின் கண்ணாடிக் கதவை இறக்கிவிட்டு பெருவிரல் உயர்த்திக் காட்டினார். வாக்குச் செலுத்தும் ஒற்றை விரலை உயர்த்தி நின்றேன். அவரின் முத்தம் உடம்பெங்கும் பரவிக் கொண் டிருந்தது.

நன்றி : ஆனந்த விகடன்

● K.ஜலாலுத்தீன்

# வெறுப்பு அரசியல்

*வெறுப்பு மறைய... பாசம் மலர...*




**நூல்:**
வெறுப்பு அரசியல்

**ஆசிரியர்:**
**Dr. K.V.S.**
ஹபீப் முஹம்மத்

**வெளியீடு:**
இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்(IFT),
138, IFT சந்து,
பெரம்பூர் நெடுஞ்சாலை,
சென்னை 600012.
தொலைப்பேசி:
044-26620041
அலைப்பேசி:
86680 57596

**பக்கங்கள்:**
116

**விலை:**
ரூ. 120/-

இந்தியா பல்வேறு மொழிகள், மதங்கள், இனங்கள், மரபுகள், பண்பாடுகள் ஒன்றாய் பிணைந்த ஒரு பேரருவி. இப்பேரருவியின் நீர்த்துளிகள் ஒவ்வொன்றும் தனித்த சுவை கொண்டவை; ஆனாலும் ஒன்றாய்க் கலந்தால்தான் அதன் மாபெரும் அழகு வெளிப்படும். ஆனால் அண்மைக் காலங்களில் அந்த ஓட்டத்தில் வெறுப்பு எனும் நஞ்சு கலக்கத் தொடங்கியிருக்கிறது. அரசியலின் பெயரால், அதிகாரத்தின் ஆசையால் மனித மனங்களில் பிளவு விதைக்கப்படும் காலம் இது.

வெறுப்பு அரசியல் என்பது ஒரு கொடூரமான மாயை. அது மதத்தின் பெயரில் மனிதனை மனிதனிடமிருந்து பிரிக்கிறது; மொழியின் பெயரில் சகோதரத்துவத்தைச் சிதைக்கிறது; சாதியின் பெயரில் சமத்துவத்தின் வேரை அறுக்கிறது. பயம், ஐயம், கோபம் என்ற இந்த மூன்றையும் ஆயுதமாகக் கொண்டு அரசியல் தன் அரியணையை நிலைநாட்ட முயல்கிறது. இன்று ஒருவர் ‘நாம்’ என்ற வட்டத்திற்குள்; நாளை அவர் ‘அவர்கள்’ என்ற ஒதுக்கப்பட்ட கோட்டிற்குள் தள்ளப்படுகிறார். இவ்வாறான பிரிவுகள் சமூகத்தின் ஆன்மாவையே கிழித்தெறிகின்றன.

ஆனால் இந்திய மண்ணின் ஆழத்தில் வெறுப்பை விட ஆழமானது ஒன்று உள்ளது அது பாசம். பண்டைய இலக்கியங்களில், பக்திப் பாடல்களில், விடுதலைப் போராட்ட வரலாற்றில், இந்த மண் எப்போதும் அன்பின் மொழியையே பேசியுள்ளது. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற சிந்தனை, உலகமே ஒரு குடும்பம் என்ற உயரிய உணர்வு, நம் பண்பாட்டின் முதுகெலும்பாக இருந்தது. அந்தப் பாசமே இந்தியாவின் உண்மையான அரசியல்.

வெறுப்பு ஒரு நாளும் நிலைக்காது; அது தீயைப் போல எரியும் வரை ஒளிரும், எரிந்த பின் சாம்பலாகும். ஆனால் பாசம் நதியைப் போல அமைதியாக ஓடி, உயிர் கொடுத்து, தலைமுறைகளைத் தழுவிச் செல்லும். அரசியல் வெறுப்பை விதைத்தாலும், மக்கள் மனம் அன்பைத் தேடுகிறது. அயலான் பசியாறாமல் நான் உண்ண மாட்டேன் என்ற மனிதநேயமே இன்னும் கிராமங்களிலும், நகரங்களின் ஓரங்களிலும் உயிருடன் துடிக்கிறது.

எனவே இன்றைய காலத்தின் கடமை தெளிவானது. வெறுப்பை எதிர்க்க வாள் வேண்டாம்; பாசத்தைப் பரப்ப மனம் போதும். கேள்வி எழுப்பும் அறிவு, கருணை கொண்ட இதயம், சமத்துவத்தை நேசிக்கும் பார்வை இவைதான் உண்மையான ஜனநாயகத்தின் தூண்கள். அரசியல் அதிகாரம் மாறலாம்; ஆனால் மனித நேயம் மலர்ந்தால் மட்டுமே நாடு தழைக்கும்.

‘வெறுப்பு மறைய, பாசம் மலர’ இது ஒரு கனவு அல்ல; இந்தியாவின் இயல்பு. அந்த இயல்பை மீண்டும் உயிர்ப்பிக்க ஒவ்வொரு மனிதனும் தன் உள்ளத்தில் இருந்து தொடங்க வேண்டும். அன்பு அரசியலாக மாறும் நாளே இந்தியா தன் உண்மையான முகத்தை உலகிற்குக் காட்டும்.

இன்றைய இந்தியச் சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் வெறுப்புக் குற்றங்கள், வெறுப்புப் பரப்புரைகள், வெறுப்பு அரசியல் ஆகியவை

நாளுக்கு நாள் வேரூன்றி வளர்ந்து வரும் இக்காலச் சூழலில், நாடறிந்த நாவலரும் பன்னூல் ஆசிரியருமான டாக்டர் ஹபீப் முஹம்மத் அவர்கள் இந்த அழகிய, சிந்தனைத் தூண்டும் நூலை எழுதியுள்ளார்.

‘என் இனிய இந்திய மக்களே!’ எனும் உருக்கமான அழைப்புடன் தொடங்கும் இந்நூல் வெறுப்பு எவ்வாறு விதைக்கப் படுகிறது என்பதையும், மேற்குலகிலும் இந்தியாவிலும் வெறுப்பு அலை உருவான வரலாற்றுப் பின்னணியையும் தெளிவாக எடுத்துரைக்கிறது. கோயில்கள் இடிப்பு தொடர்பான உண்மை நிலை, இந்தியாவின் வளர்ச்சியில் முஸ்லிம் ஆட்சியாளர்களின் பங்களிப்பு, நாட்டுப் பிரிவினையின் வலி நிறைந்த வரலாறு, வெறுப்பை விதைக்க வகுப்புவாத சக்திகள் முன்வைக்கும் போலியான வாதங்கள், அவை சமூகத்தில் ஏற்படுத்திய கொடூரமான விளைவுகள் ஆகிய அனைத்தையும் வலுவான ஆதாரங்களுடன் ஆசிரியர் விரிவாக விளக்குகிறார்.

அதோடு மட்டுமல்லாமல் வெறுப்பை வேரறுத்து மனித மனங்களில் அன்பை மலரச் செய்ய வேண்டிய வழிமுறைகளையும், மனிதநேயத்தின் அவசியத்தையும், ஆழ்ந்த பார்வையுடனும் நெகிழ்வான மொழியுடனும் இந்நூல் முன்வைக்கிறது.

நாட்டு நலனில் உண்மையான அக்கறை கொண்ட ஒவ்வொருவரும், வெறுப்பு மறைந்து பாசம் மலர வேண்டும் என்று விரும்பும் ஒவ்வொருவரும் இந்நூலை அவசியம் வாசிக்க வேண்டும். இது தனிநபரின் வாசிப்பிற்கான நூலாக மட்டுமல்ல; அனைவரிடமும் பகிர்ந்து வாசிக்கச் செய்ய வேண்டிய ஒரு சமூகப் பொறுப்பின் ஆவணமாகும்.

வெறுப்பு அரசியலை முற்றாக ஒழித்து, மனிதநேயம் மலரச் செய்யும் முயற்சியில் இஸ்லாமிய நிறுவனம் அறக்கட்டளை (IFT) வெளியிட்டுள்ள இந்நூல் ஒரு வலிமையான ஒளிவிளக்காகத் திகழட்டும்.







# அக்கரைப் பச்சை

● ஜரினா ஜமால்

நீண்ட நாள் பிரிவிற்குப் பிறகு நிறைய பேசிக்கொண்டே இருந்தார்கள். பெண் பிள்ளைகள் இருவரும் சாப்பிட்ட பாத்திரங் களைக் கழுவி கவிழ்த்தி விட்டு வந்து ‘நான் சாலி மாமி பக்கத்தில் படுப்பேன்’ என்று போட்டி போட்டார்கள்.

ஃபாத்திமா பக்கத்தில் வந்து அமர்ந் தாள். ‘மச்சி உங்களிடம் சில முக்கியமான விஷயங்கள் பேச வேண்டி உள்ளது’

‘சாயந்திரம் அப்படியே காலாறப் போய் வருவோம்’

‘இன்னைக்குத்தான வந்திருக்கீங்க.. நாளயிலிருந்து நீங்கள் போகும் இடம் எல்லாம் சொல்லுங்க. நானே எல்லா எடமும் கூட்டிப் போறேன்’.

‘அது நாளக்கி..! இன்னக்கிக் கொஞ்சம் காலாறப் போய் வருவோமே?’

‘எங்க மச்சி?’

‘மையவாடியின் பக்கம்’

அஹமது ஃபாத்திமாவுக்கு ‘திக்’கென் றது. வாப்பா, உம்மா, காக்கா, மாமனார், மாமியார் என்று ஒரு நாளும் மையவாடிக்கு அவள் போனது கிடையாது. இந்த சாலி மச்சி வரும்போதெல்லாம் கபரடிக்குக் கூப்பிடுகிறாள். மூத்த மகள் கல்யாணத்திற்கு வந்தபோதும் மையவாடி கேட்டு வரை அழைத்துப் போய் வந்தாள். தன் மாமியார் திட்டியது நினைவுக்கு வந்தது.

‘நல்ல காரியம் நடக்கும் நாளதுவுமா உன் மச்சி கூப்பிட்டான்னுட்டு கபரடிக்குப் போயிட்டு வர்றே?’

‘கட்டாயம் இன்னைக்கே போக வேண் டுமா சாலி மச்சி?’

‘ஆமாம்! எங்கேயும் போகு முன்னாலே போயிட்டு வந்துருவோம்’

அடக்கம் செய்யும் இடத்தைச் சிறப் பாக அழகுப்படுத்தி பாதை அமைத்து லைட் எல்லாம் போட்டு இருந்தார்கள்.

‘கருக்கலுக்குள் போய்விட்டு வந்து விடலாம். நீங்கள் வந்தது தெரிந்தால் உங் களைப் பார்க்கவும் ஆட்கள் வருவார்கள்’

‘சரி பிள்ளைகள் வீட்டில் இருக்கட்டும். நான்கு மணிக்கு அஸர் தொழுதுட்டுப் போகலாம்’

பேசியபடி புறப்பட்டார்கள். ‘மச்சி பொறவாச வழியா போகலாம்.. தெரு வாச வழியா வேணாம்’

விளங்காட்டை அடைந்தார்கள்.

*‘அவசரங்கள் ஏதுமின்றி*
*ஆர்வங்களோடு*
*நான் நடந்து வருகிறேன்*
*உன் மண்ணறை நோக்கி*

*கை நீட்டி ஒரு முறை*
*எனை அழைக்க மாட்டாயா?*
*எனக்கோர் முறை*
*சலாம் உரைக்க மாட்டாயா?*
*சுகமா நீயென*
*நலம் விசாரிக்க மாட்டாயா?*

*நான் சொல்ல நினைப்பதை*
*நீ சொல்லி முடிப்பதும்*
*நான் செய்ய நினைப்பதெல்லாம்*
*நீ செய்து முடிப்பதுமாய்*
*கருத்து ஒருமித்ததில்*
*தொடர்ந்து சென்ற*
*நீண்ட பயணம் நம்முடையது*



*என்னிடம் விடை பெறாமல்*
*ஆரம்பமானது இல்லை*
*உனது பயணங்கள்*

*என்னில் ஆலோசிக்காமல் தீர்மானமானதில்லை*
*உனது முடிவுகள்*
*இப்போது மட்டும் என்ன என்னைத் தனியாக*
*விட்டுச் சென்றாய்?*

*அத்தனை அவசரம்*
*அத்தனை ஆர்வம்*
*நிம்மதியாய்.... நிரந்தரமாய்...*
*மீளாத் துயிலில் இன்று நீ!*

*என்னையும் மீறிப் போன*
*ஒரு பொல்லாத காத்திருப்பு.*
*மீண்டும் மீண்டு வர மாட்டாயா*
*நீயென*
*ஒருமுறை*
*ஒரே ஒரு முறை*
*விழி திறந்து இதழ் விரித்து*
*என் நாமம் அழைக்க*
*உயிர் பெற மாட்டாயா நீ என*
*ஏங்குது இன்னும் இந்தப் பொல்லாத மனம்*

*இயற்கையை ஏற்றிடு நெஞ்சமே!*
*ஈமானை இழந்து விடாதே உள்ளமே!*
*என என்னையே நான் கடிந்து*
*கடந்து போகிறேன் உனது மண்ணறையையும்*
*விட்டும் நீங்கி!*

மௌனமாக கரைந்து கொண்டிருக்கும் சாலிஹாவின் கைகளை மென்மையாகப் பற்றி அழைத்துத் திரும்பினாள் ஃபாத்திமா. இரவு அஹமது ஃபாத்திமா சொன்ன வார்த்தைகள் சாலிஹாவின் இத்தனை நாள் நிம்மதியைத் தவிடு பொடியாக்கியது.

தூக்கத்தைத் தொலைத்தாள். துக்கத்தை அணைத்தாள்.

காலையில் எழுந்த போது சாலிஹாவின் முகம் அழுது வீங்கியது போல் இருந்தது. இருவரும் தொழுதார்கள் குர்ஆன் ஓதினார்கள். சாலிஹாவின் கேவல் அதிகமானது. ஃபாத்திமா அவள் முதுகை நீவி விட்டாள்.

'மச்சி கோபமா?'

இந்தத் தடவை நான் ஊருக்கு வந்த நோக்கமே சொத்துகள் பிரிக்கப்பட வேண்டும். சரியாக எல்லாக் காரியத்தையும் செய்து விட்டு தோப்பை உங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றுதான். நீங்கள் திரும்பவும் சென்னைக்குப் போய் தான் ஆகணுமா? '

'ஊரும் மதுரையுமாக இருப்பேன்'

'மச்சி ஊரோடு இருங்கள். வீட்டைப் பராமரிக்காவிட்டால் வீடு வம்பா போய் விடும். ஆள் இல்லாத வீட்டில் கரையான் பிடிக்க ஆரம்பிக்கிறது'

'தனியாக இருப்பது மிகவும் சிரமம் மச்சி. அதுவும் உங்கள் அண்ணன் அம்மாவோடு வாழ்ந்த வீட்டில் நினைவுகள் என்னை ரணப்படுத்தி விடும்'

'தனிமையில் இருந்தால் தானே? நமக்கென்று ஒரு துணையைத் தேடிக் கொண்டால் என்ன? இஸ்லாம் இதற்கு அனுமதி வழங்கியிருக்கின்றதுதானே..!'

'மச்சி! சல்மான் உங்கள் அண்ணன். நாங்கள் கொண்ட அன்பைப் பார்த்து என் வீட்டினர் கூட எதுவும் சொன்னதில்லை. நீங்கள் எப்படி இப்படிப் பேசுகிறீர்கள்?'

'என் அண்ணன் இறந்து விட்டார் என்பதற்காக உங்கள் வாழ்க்கையை நான் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. நீங்கள் இருவரும் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்து இவ்வளவு ஆண்டுகள் ஒன்றும்

சொல்லாமல் இருந்து விட்டேன். உங்க அம்மா வீட்டில் யாரும் இதைப் பற்றி பேசுவாரில்லை'

'இப்போ குடும்பத்தின் சொத்துக்கு ஆசைப்பட்டு உங்களுக்கு மறுமணம் செய்யவில்லை என்று ஊரில் பேச ஆரம் பித்து விட்டார்கள்'

சாலிஹா குரலை உயர்த்தி சீறினாள். 'யார் அப்படிச் சொல்வார்கள்? ஊர் சொல்கிறது என்பதற்காகத்தான் எனக்கு மறு மண வாழ்க்கை ஏற்பாடு செய்யப் போறீங் களா? உங்கள் அண்ணனோடு வாழ்ந்த வாழ்க்கையை மட்டுமே நான் அசை போட்டு நாள்களைக் கழித்து விடுவேன். அல்லாஹ்வே! அவர் இருந்த இடத்தில்.. நான் நினைத்துக் கூட பார்க்காத விஷயங் களைப் பேசுகிறீர்களே? எனக்கு அவமான மாகவும், அருவருப்பாகவும் இருக்கு!'

'இங்க பாருங்க சாலி மச்சி! உங்களை விட நான் வயசில் பெரியவள். எது நல்லது? எது கெட்டது? என்று எனக்கும் தெரியும். எங்க சின்ன மாமனாரின் மகன் இஸ்மாயீல் கொழுந்தன், இவ்வளவு நாள்கள் திருமணமே செய்யாமல் சிங்கப் பூரில் இருந்தார். நல்ல வேலை பார்க் கிறார். இப்போது தாய் நாடு திரும்பிட்டார். உங்கள மண முடிக்க அவர்கள் வீட்டில் முழு சம்மதம். நீங்கள் வந்த பிறகு உங்களி டம் பேசி உங்கள் அம்மா வீட்டிலும் செய்தி சொல்லி ..'

'மச்சி நிறுத்துங்கள். இதற்கு மேல் ஒரு வார்த்தை இது போல் பேசினால் நான் மதுரை புறப்பட்டுறுவேன்'. வேகமாக எழுந்து தோட்டத்து தட்டிக் கதவருகே போய் நின்றாள்.

'மச்சி நிறுத்துங்கள். இதற்கு மேல் ஒரு வார்த்தை இது போல் பேசினால் நான் மதுரை புறப்பட்டுறுவேன்'. வேகமாக எழுந்து தோட்டத்து தட்டிக் கதவருகே போய் நின்றாள்.

தூரத்து டி.வி.எஸ் பொத்தையில் மேகங்கள் முட்டுவதும் மோதுவதுமாக மலையைச் சுற்றி வட்டமடித்தது. அந்த மலை உச்சியில் ஏறி நின்று, 'சல்மான் என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா?' என்று கூவ வேண்டும் போல் இருந்தது.

பிள்ளைகளுக்கு ஒன்றுமே புரிய வில்லை. இது போல் மாமியையும் உம்மா வையும் பார்த்ததில்லை. பெரிய பெண் ஃபாத்திமாவிடம் போய், 'உம்மா! சாலி மாமியை என்ன சொன்னே? அவங்க அழுவுறாங்களே?' எனக் கேட்டாள்.

சின்னவள் சாலிஹாவின் கையைப் பிடித்து இழுத்தாள். 'மாமி தெரு வீட்டிற் குப் போகலாம் வாங்க.. எனக்குத் தலை பின்னி விடுங்க.!'

ஹாலுக்கு வந்து அமர்ந்தார்கள்.

'ஏம் மாமி மாமாவை நெனச்சி அழுறீங் களா?'

'இல்லம்மா..'

'பின்ன நேத்து எதுக்கு மையவாடிக்குப் போனீங்க?'

'இறந்து போனவர்களுக்காக நாம் பிரார்த்தனை செய்யும்போது அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியையும், நிம்மதியையும் கொடுக்கும்'

'அதத்தான் வீட்டிலிருந்தே கேக்க லாமே?' புத்திசாலியாக கேட்டாள்.

சாலிஹா புன்னகைத்தாள்.

'நாம வாழப்போகும் இடத்தை ஒரு முறை பாக்கப் போனேன்'

'மாமி .. பாட்டி மாதிரி பேசாதீங்க!'

- தொடரும்..

# சமரசம் புதிர் போட்டி 8

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 ஏப்ரல் 30 ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. ‘மேலும், ஒவ்வொரு சமூகத்தார்க்கும் பலியிடும் ஒரு நெறிமுறையை நாம் வகுத்துக் கொடுத்துள்ளோம். அந்த(ந்தச் சமூக) மக்கள் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியுள்ள கால் நடைகளின் மீது அல்லாஹ்வின் பெயரை உச்சரி(த்து அறு)க்க வேண்டும் என்பதற்காக! (பல்வேறுபட்ட இவ்வழிமுறைகளின் நோக்கம் ஒன்றுதான்) எனவே, உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான்! அவனுக்கே நீங்கள் அடிபணியுங்கள். மேலும் (நபியே!) பணிவான நடத்தையை மேற்கொள்வோர்க்கு நீர் நற்செய்தி அறிவிப்பீராக!’ இந்த வசனம் இடம் பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) அந்நூர் ஆ) அல்ஹஜ்
2. வட்டியின் மூலமாக ஈட்டப்படுகின்ற பொருள் என்னதான் அதிகமாகத் தோன்றினாலும் அதன் முடிவு பற்றாக்குறையிலும், தட்டுப்பாட்டிலும், போதாமையிலும், இல்லாமையிலும்தான் முடியும்’ என்ற நபிமொழியை அறிவித்தவர்

   அ) அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரலி)
   ஆ) அபூ ஸயீத்(ரலி)
3. விபச்சாரத்தை விடக் கடுமையான குற்றம் என எதைக் குறித்து நபி(ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்?

   அ) புறம் பேசுதல் ஆ) வட்டி
4. தீயவர்களின் ஆட்சி அதிகாரத்தின் மூலம் ஏற்படும் எதிர் விளைவுகளில் ஒன்று

   அ) பூமியில் குழப்பம் விளைவித்தல்
   ஆ) பொருளாதாரச் சீரழிவு
5. அண்மையில் இறைவனிடம் மீண்ட நாகரிகச் சிந்தனையின் சமகால முன்னணி அறிஞர்

   அ) மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான்
   ஆ) சையத் முஹம்மத் நகீப் அல் அத்தாஸ்
6. சுவீடன் நாட்டின் தலைநகர்

   அ) மாட்ரிட் ஆ) ஸ்டாக்ஹோம்
7. 1953இல் எண்ணெய்க் கிடங்குகளை தேசியமயமாக்கிய ஈரானிய ஆட்சியாளர்

   அ) முசாதிக் ஆ) மன்னர் ஷா
8. சவூதி அரசால் 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்ட ஹமாஸின் சவூதி பிரதிநிதி

   அ) கலீல் அல் ஹய்யா
   ஆ) முஹம்மத் அல் குதாரி
9. அமெரிக்காவின் மிரட்டலுக்கு அடிபணியாமல் தக்க பதிலடி தருவோம் என ட்ரம்பை கதிகலங்க வைத்த ஈரானின் வெளியுறவு அமைச்சர்

   அ) அப்பாஸ் அராக்சி ஆ) மசூத் பெஷக்கியன்
10. தவம், தமிழ்தாசன் முயற்சியில் அறக்கலகம் தயாரித்து பெரிதும் கவனத்தை ஈர்த்த ஆவணப்படம்

    அ) மதுரைக் கோப்புகள்
    ஆ) திருப்பரங்குன்றம் FILES

## புதிர் போட்டி ஆறுக்கான விடைகள்

1.(ஆ) ஆலு இம்ரான் 2.(ஆ) அபூஹுரைரா (ரலி) 3.(ஆ) ஏழையான முஸ்லிம் அல்லாதவர்கள் 4.(அ) சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு 5.(ஆ) ஜெனரல் மனோஜ் முகுந்த் 6.(அ) ஆயத்துல்லாஹ் சையத் முஸ்தஃபா 7.(ஆ) பிச்சாண்டி 8.(ஆ) ஆர்.வி.ஆர்லேகர்

**சரியான விடையை எழுதியவர்கள்:**

1. முஹம்மத் உவைஸ், ஏர்வாடி 2. ந.அனிபா, நாமக்கல் 3. ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம் 4. P.A. சமீஹா, கடையநல்லூர் 5. முஹம்மது ஆதில் இப்ராஹீம், பெங்களூர் 6. மௌலவி வி.எஸ். சம்சுத்தீன் ஃபைஜி, கடையநல்லூர்

**பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**

முஹம்மது ஆதில் இப்ராஹீம், பெங்களூர்




# மக்கள் நல அரசு அமைய வேண்டும்

## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தேர்தல் நிலைப்பாடு

2026 ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறவிருக்கின்ற தமிழ்நாடு, புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு மாநிலத் தலைவர் மௌலவி ஹனீஃபா மன்பயீ வெளியிட்டுள்ள செய்தியில் கூறியதாவது: ‘நாங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களுக்குச் சென்று ஆய்வுகள் செய்தோம். தொடர்ந்து அரசியல் கட்சிகளுடைய நிலை பாடுகளையும் கவனித்து வருகின்றோம். ஆளுங்கட்சியின் பல்வேறு செயல்பாடுகளையும் உள் வாங்கி இருக்கின்றோம். இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டே திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரிப்பது என்ற முடிவை எடுத்திருக்கிறோம்.

மாநில உரிமைகள், எல்லோருக்குமான வளர்ச்சி, ஃபாசிஸ எதிர்ப்பு, கல்விக்கான முக்கியத் துவம், பெண்கள் மேம்பாடு, சிறுபான்மையினர் நலன் போன்ற பல விசயங்களில் கடந்த ஐந்தாண்டு திமுக அரசின் செயல்பாடுகள் சிறப்பாக அமைந்துள்ளது.

எங்களுடைய மாணவர் அமைப்பாகிய இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பு(SIO), எங்களுடைய மாணவியர் அமைப்பான இஸ்லாமிய மாணவியர் அமைப்பு(GIO), எங்களுடைய இளைஞர் அமைப்பான சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு இணைந்து தேர்தல் பணியில் பங்களிக்க உள்ளோம். நூறு விழுக்காடு வாக்குச் செலுத்துவதற்கும், திமுக தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவாக தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் பரப்புரை செய்யத் திட்டமிட்டுள்ளோம்.

இறைவனின் நாட்டத்தால் இக்கூட்டணி மகத்தான வெற்றி பெறும். வென்று வருகின்ற திமுக தலைமையிலான ஆட்சி மக்கள் நல அரசாக இருக்க வேண்டும், ஒழுக்கத்தில் சிறந்த அரசாகத் திகழ வேண்டும். நீதியில் சிறந்த அரசாகவும், ஊழலற்ற அரசாக, மது இல்லாத அரசாக இருக்க வேண்டும். மது, ஊழல், லஞ்சம் இல்லாத நீதிமிக்க, எல்லாருக்குமான வளர்ச்சியை உள்ளடக்கிய மக்கள் நல அரசு அமைவதற்கும், இந்தத் திசையில் தமிழ்நாடு நடைபோடுவதற்கும் நாங்கள் துணைநிற்போம். எங்களது பங்களிப்பையும், ஆதரவையும் வழங்குவோம்.

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT
# TO PAY & COD
# BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA
INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 16 - 30 APRIL 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

பதவிக்காக ஆசைப்படாதீர்கள். நீங்கள் அதைக் கேட்டுப் பெற்றால் அதனிடமே நீங்கள் ஒப்படைக்கப்படுவீர்கள். நீங்கள் கேட்காமலேயே அப்பதவி உங்களுக்குக் கிடைத்தால் அந்தப் பொறுப்புகளை நிறைவேற்ற உங்களுக்கு இறைஉதவி கிடைக்கும்

– முஹம்மது நபி(ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35, கதீட்ரல் ரோடு, சென்னை - 600 086.
போன் : (044) 2811 3611


If undelivered, please return to : **Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.**